உ

கடவுள் துணை.

திருவெண்காடரென்னும்

# பட்டணத்தடிகள்

## புராண வசனம்.

இஃது

கண்டனூர்

நா நா. அரு. காசிவிசுவநாதன் செட்டியார்

தே. அரு. சித. கரு. இராமநாதன் செட்டியார்

இவர்களின் விருப்பத்தின்படி.

நாங்கூர். புஸ்தக வியாபாரம்

சி. பழனி முதலியார் அவர்களால்

நாகை, சரவண முதலியாரவர்களது

சென்னை திருவொற்றியூர்

கலைமகள் விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது,

1939

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவெண்காடரென்னும்

# பட்டணத்தடிகள்

## புராண வசனம்.

### நைமிசாரணியம்

திருமறைத் தமிழ்போற் சிவமணம் வீசப் பெற்ற சத்தியலோகத்தில் வசிக்கும் பிரமதேவரி டத்தில்; சௌநகர், சதாநந்தர், காசிபர் முதலாகிய இருடிகள்சென்று, தோத்தரித்துச் சர்வலோக சிருஷ்டிகராகிய பிரமதேவரே! ஜனனமரண துன் பத்தை நிவர்த்திசெய்கின்ற தவத்தினையனுட்டிக்க எத்தனஞ்செய்துவரும் அடியேங்களுக்குத் தவத் திற்குப்போதுமான இடவிசாலமும், தடாங்களும், அகண்டபரிபூரண சச்சிதாநந்த சொரூபியாகிய சிவபெருமானைப் பூசிப்பதற்குப்போதுமான பத்திர புஷ்பச்செடிகளும், ஆகாரத்திற்குப் போதுமான காய் கனிகளைக் கொடுக்கின்ற விருட்சங்களும் கூடிய தபோவனம் இன்னதென்று தேவரீர் திரு வாய்மலர்ந்தருள வேண்டுமென்று விண்ணப்பித்த னர். அதைக்கேட்ட பிரமதேவர் ஒரு தருப்பையை

யெடுத்து வட்டமாகமுடிந்து, அநாதிமலமுத்த சித்துருவாகிய ஸ்ரீகயிலாசபதியைத் தோத்தரித்து இத்தருப்பை நேமிபோய்த் தங்குமிடமே நீவிர் தவஞ்செய்தற்குத்தகுந்த இடமாமென்று முனிவர் கட்குச்சொல்லி, தருப்பைச்சக்கரத்தைப் பூமியில் விட்டுவிட்டனர். சிவானுக்கிரகத்தால் அதுபோய், மகாபாதகங்களை விமோசனஞ் செய்கின்றதும், அல்லி, தாமரை, நீலோற்பலம், செங்கழுநீர் முத லியவைகளையுடையது மாகிய அழகிய தடாகங் களும், மல்லிகை, முல்லை, இருவாட்சி, செவ்வந்தி, கொன்றை, தும்பை முதலிய புட்பச்செடிகளும், செண்பகம், கோங்கு, பாரிசாதம், வாழை, தெங்கு, மா, பலா, அகில், சந்தன முதலிய விருட்சங்களும் நிறைந்த ஓர்வனத்தில் தங்கியது. அவண் முனிவர் கள்சென்றுதவஞ்செய்யத்தொடங்கினர். அவ்வனம் தருப்பை நேமிபோய்த் தங்கியகாரணத்தால் நைமி சாரணியமெனப் பெயர் பெற்றது. இத்தகைய நைமிசாரணியத்தில் தவஞ்செய்து கொண்டிருந்த முனிவர்கள் ஒருகாலத்தில், சைவசித் தாந்த முடிபுக ளெல்லாமுணர்ந்த வியாசமுனிவர் மாணக்கராகிய சூதமுனிவர் வரக்கண்டு எதிர்சென்று பணிந்து உப சரித்து அழைத்துவந்து இருக்கச்செய்து அருச்சித்துச் சூழவிருந்து சொல்வாராயினர். முனீ ந்திரரே! தேவரீரிடத்தில் அநேகமாயிரந் தெய்வக் கதைகளைக் கேட்டனம். இவ்வளவில் திருப்தி பிறந்ததில்லை. மேலுந் தேவரீருக்குச் சிறிது வருத் தங்கொடுக்க உடன்பட்டனம், திருவுள்ளக் கேடு செய்யற்க, எங்கள்வேண்டுகோளெங்கள் மாட்

டன்றி மற்றுலகத்தினர் யாவருக்கும் பெருநன்மை விளைக்கத்தக்கதா மாதலால் கடாட்சித்து நாங்கள் கொடுக்குஞ் சிரமத்தை அங்கீகரித்துக் கொள்ள வேண்டும். அதாவது, முன் சுதரிசனருடைய வானந்தசரித்திரத்தைச் சொல்லியபின் சிவபெருமானது தோழனான குபேரன் காவிரிப்பூம் பட்டினத்தில் வேளாண்செட்டிகள்குலத்தில் அவதரித்து நமது முதல்வனாகிய கடவுளினையே மகவாகப் பெற்று வாழ்ந்து சிவஞானியாய் விளங்கினரெனத் திருவுளம்பற்றியுள்ளீர் அம்மங்களகரமான புண்ணியசரித்திரத்தினை விரிவாகவிளம்பல் வேண்டுமெனப் பிரார்த்தித்தனர்.

அதுகேட்ட சூதமுனிவர் சற்றுநேர மொன்றுந் தோன்றாதவராய் ஆநந்தநீர் கண்களிற்பெருக யோகத்திலிருந்து முனிவரகளைநோக்கி, ஐயன்மீர்! இருவினையொப்பும், மலபரிபாகமும், சத்திநிபாதமு மடைந்தவர்க ளாதலால் சிவ ஞானியின் கதையைக் கேட்க விருப்பமுற்றீர். இதையுங்கட் கெடுத்துச் சொல்லுதலால் நானும் புனிதனாவேன் என்று தனதாசிரியரை மனதிற்றியானித்து அப்பெரியோர் சரித்திரத்தினைச் சொல்ல வாரம்பித்தனர். கேளும் முனிபுங்கவர் காள் ! இச்சரித்திரம் பூர்வத்தில் திருப்பாற் கடலையுண்ட செல்வராகிய உபமன்னிய பகவான் தன் மாணாக்கர்கட்குக் கூறிய தாக பௌஷியோத்தர புராணத்துள் திருவிடைமருதூர் மான்மியத்திற் கூறப்பட்டுள்ளது.

## புராணவரலாறு.

ஞானமே சொரூபமாய் விளங்கும் மகா கைலாசமலையின்சாரலிலே சைவமணமே யெத்திக்கினும் வீசப்பெற்றவனமொன் றுண்டு. அதில் பல சைவ முனிபுங்கவர் சூழகண்ணபிரானது சிவதீட்சாகுருவாகிய உபமன்னியபகவான் எழுந்தருளியிருக்கும் போது அவர்மாணக்கர்கள் அவர் சந்நிதியிலெழுந்துநின்று நமஸ்கரித்துச் சொல்வாராயினர். ஓ! வியாக்கிரபாதமுனி புத்திரரே! சிவமுணர்ந்த பெரியோர்களாகிய அடியார்களது அற்புதச் சரித்திரங்களைச்சொல்லி யருளவேண்டு மென்றனர். அப்போது அப்பகவான் பரவசமாய்த்தம் பித்து நின்று தெளிந்து தம்மாணக்கர்களை நோக்கி ஐயா! அந்தணாளர்களே! நினைக்க நினைக்கநெஞ்சினை யுருக்கி, அஞ்ஞானத்தையோட்டி, மெய்ஞ்ஞானத்தைக்காட்டி சித்திமுத்திகளைக்கூட்டி, புனிதமாக்கவல்லசுவேதாரணியர் சரித்திரமென்னும்திருவெண்காட்டடிகளுடைய திருக்கதையினைச்சொல்வேன் கேட்பீர்களாக வென்று சொல்வாராயினர்.

## சிவபெருமான்திருவுலா.

கைலாசபதியாகிய சிவபெருமான் உலகமாதாவாகியமகா தேவியாருடன் இடபாரூடராய் மூத்த பிள்ளையார், இளையபிள்ளையார் முதலியருடன், உலகில் லீலாவிலாசமாக உலாவரும்படி திருவுள்ளத்திற்கொண்டு, கூர்மாண்டராதி கணநீசுவரர்களும், விஷ்ணுவாதி தேவர்களும் அகஸ்திய

ராதிமுனிவர்களும், அரக்கராதிகணங்களும் புடைசூழ்த்து அர ! அர !! என்று போற்ற அன்பின் றோழரான குபேரன் தொடர எழுந்தருளி, இமயம், மத்தரம், பசுபதீச்சரம், கேதாரம், காசி, பருப்பதம், காளத்தி, ஆலங்காடு, முல்லைவாயல், ஒற்றியூர், மயிலை, கழுக்குன்றம், காஞ்சி, அருணைசலம், விருத்தகிரி, முதலிய க்ஷேத்திரங்களை யலங்கரித்துக் கொண்டு தாகாசரகசியமானத்திருச்சிற்றம்பலமாம் சிதம்பரத்தில், சில தினம் வீற்றிருந்து மற்றைய திருப்பதிகளுக்குஞ் செல்ல எழுந்தருளிச் சுவேதாரண்ணிய மென்னும் திருவெண்காட்டினை யடைந்தருளினார்.

அத்திருவெண்காட்டிற்குச் சமீபத்தில் சோழராசனி ராசதானிகளை நந்தினு ளொன்ருயும், இயற்பகை நாயனார்திருவவதாரஞ் செய்யப்பெற்றதும், ஆகாயத்தை யளாவியமதில்களையும், நவரத்தினங்களாலிழைக்கப்பெற்ற அரசியல் மண்டபம், அமைச்சியல் மண்டபம், மறைபயில் மண்டபம், வித்தியா மண்டபமுதலிய அநேக மண்டபங்களையும், மேகங்கள் தங்கும் பொன் மயமாகிய சிகரங்களையுமுடைய; அரண்மனையும்,: வேதாகமங்களை நன்குணர்ந்து சிவபக்தி அடியார் பக்திகளில் வழுவாத சிறந்த ஆதிசைவ வேதியர் வீதிகளும், அநேகஞ் சந்திர னுதயமானுற்போன்ற பிரகாசத்தையுடைய நாலுவித இரத்தினங்கள் பதித்த பலவடுக்கு உப்பரிகைகளையும், மாட மாளிகைகளையு முடைய வைசிய வேளாளர் வீதிகளும், மற்ற வெல்லா வரு

ணத்தாறும் வசிக்கும் அழகிய தெருக்களும் நிரம்பப்பெற்றதுமான காவிரிப்பூம் பட்டினத்தைக் குபேரனார் பார்த்த வளவில் அவர் மனத்தைக் கவர்ந்தது.

அப்போது, பெருமான் தோழனாராகிய குபேரனார் சுவாமியின் றிருவடிகளில் பலகாலும் விழுந்து பணிந்து எழுந்து துதித்து நின்று, எம்பெருமானே! இத் தெய்வத்திருப்பதி யாது காரணமோ யான் தன்னைவீட்டுப் பிரியாவகை யோராசையைத் தூண்டி என்னை முற்றும் வசஞ்செய்து கொண்டது திருவுள்ளமானால் இங்கு சில காலம்வசிக்கப் பெறு வேனாகவென்று வேண்டிக்கொண்டனர். அது கேட்டருளிய வாண்டவர் அங்ஙனமே மனிதயாக்கை யடைந்து வாழ்தியென்றருளிச் செய்தனர். குபேரனார் புறத்தலுக்கஞ்சிப் பதைபதைத்து என்னாண்டவனே! ஏழையேன் மானிடப் பிறப்பினை யடைந்து மயங்கு கையில் தேவரீர் வந்து அவலமறுத்து உண்மைநிலை யனுக்கிரகித் தருள வேண்டுமென்று பலமுறை வணங்க, ஆளுடையார் அவ்வாருகுக வென்றருளி அம்மையாருடன் மற்றைய திருப்பதிகள் யாவுங்கண்டு சென்று கைலைவீற்றிருந்தனர்.

## திருவவதாரம்.

சிவாஞ்ஞைப்படி குபேரனவர் அக்காவிரிப் பூம்பட்டினத்தில் அந்நகர வேளாண் வைசிய மரபில் சிவநேச ரென்பவருக்கும் அவரதுகற்புடைய பத்தினியாராகிய ஞாநகலாம்பை யென்ப

வருக்கும் புத்திரராகவ வதரித்தார். தந்தையார் களிப்படைந்து மறையோர்களை யழைப்பித்து விதைவழங்கி, நவமணியாதி தானங்கொடுத்து, முப்பழஞ் சர்க்கரை தாம்பூலம் பகிர்ந்தளித்து, தேவாலய விழா நடத்தி, சாதகக் கருமஞ் செய்வித்து, வேள்வி சாந்தி முடித்து, புத்திரப்பேறு விழாக்கொண்டாட பத்துநாளும் எண்ணெய் விழா செய்து, பதினோராநாள் மகவை மணித்தொட்டிலேற்றி திருவெண்காடரென நாமகரணஞ்சூட்டினர்.

அச்செல்வக் குழந்தையானது அழுதும், கைகா லுதறியுதைத்தும், ஆடியும், நகைத்தும், முகங் கவிழ்ந்தும், தலை யெடுத் தசைத்தும், செங்கீரையாடியும், சப்பாணி கொட்டியும், தாய்முக நோக்கி புன்முறுவல் செய்தும், முலைநெருடி பாலுண்டு மிருந்தது, பெற்றோர் நாளொருமேனிபொழுதொரு வண்ணமகா வளர்த்து, நான்கா மாதத்திற் சந்தி மிதிப்பித்து ஆறுமாதத்திற் சிவனடியாரை உண்டிவினையாற் பூசித்து, அன்னப்பிராசனமுஞ் செய்வித்தார்கள். அப்பால் வெண்காடர் தவழ்பருமங் கடந்து, தளர்நடைப் பருவமடைந்து, தத்தடியிட்டு நடந்து, வீதிகளிலோடி சிறு தேருருட்டி, சிற்றிலிழைத்து, கண்டார் களிக்க விளையாடி அன்பு அறிவு, அடக்கம், ஆசாரம், நீராசை சத்தியம் தவம், ஆராய்ச்சி, சிவநேசமுதலியவெல்லா முடன் வளர வளர்ந்து, ஐந்து திருவயதடைந்தார். அக்காலத்தில் தந்தையாராகிய சிவநேசனார் இப்புத்தி

ரன் வரலாற்றை முற்றுங்கண்டு களிக்கப் பெரு மல் தேகவியோகஞ்செய்து சிவபதமடைந்தனர்.

ஞானகலாம்பையார் கணவனையிழந்த துக்கம் புத்திரவாஞ்சையால் நீங்கப் பெற்று, மகனார் கல்வி ப்பயிலும் பருவமடைந்ததைக் கண்டு, ஒருபாத்தி யாயரை வருவித்து அவருக்கு வேண்டுவன கொடு த்து, அவரிடம் தனது புத்திரரையோதுவதற்குப் பள்ளியில் வைத்தார். திருவெண்காடர் ஆசாரியர் முன்னிலையில் தமிழ்க்கடல் முழுவதினையும் உண் டேப்பமிட்டு முற்று முணர்ந்த முதல்வராய்ச் சிவ பத்தி அடியார்பத்தி, சீவகாருண்ணிய முதலிய ஒழு க்கம் யாவும் நிறையப் பெற்று விளங்கினர்.

திருவெண்காடர் அவ்விளம் பருவத்திலேயே; இவ்வுலகின் கண் அத்திமுதலெறும்பீ றாகிய ஒவ் வொருவுயிர்களும் துன்பமே சொரூபமாகிய யாக் கைவினை யடைந்து பிறவிக்கடலில் ஆழ்ந்து மீளாது சுழல்வதையறிந்து, நெஞ்சு துடி துடித் துப் பதைபதைத்து வாடிவருந்தி, இக்கொடிய பிறவித் துன்பத்தினை யொழிப்பது, அநாதிமல முத்த சித்துரு வாகிய சிவபெருமானை உள்ளன் போடு பூசித்து வழிபட்டாலன்றி ஓர்ஞான்றுங் கூடாதென்பதை யுணர்ந்து சிவபூசை யியற்றும் விருப்ப முடையராய் அச்சிவபெருமானிட அருவு ருவத் திருமேனியாகிய சிவலிங்க வியல்பினை யாரா ய்ந்து, இத்தகைய சிவலிங்கத்தினை நாமெவ்வாறு பெறுவது, எவ்வாறு அருச்சனை செய்வது, இக்க ருமங் குருமுகத்தாலன்றி முடியாதே, என்

றெண்ணி மனங்குழைந்து, என்னை யாட்கொள்ள குருநாதனெப்போது எழுந்தருளுவ னெனச் சிந்தித்து, உணவிலும், நித்திரையிலும், வெறுப்புண்டாக, சோர்வுற்றுக் சிவசிந்தனையுடனே படுத்துறங்கினர்.

## கனவில் சிவானுக்கிரகம்

திருவெண்காடர் நிலைமையை நோக்கிச் சிவபெருமானுர் திருவருள் சுரந்து, அவரது கனவில் முதுவேதியராய்த்தோன்றி, குழந்தாய்! எனவழைத்து மேனியைத் தடவ, வெண்காடர் ஆனுக்குற்றெழுந்து அட்டாங்க பஞ்சாங்க விதியிற் பணிந்து. ஆடிப்பாடி நாதடுமாற உள்ளநெகிழ, பாதம் பிடித்துப் பலபலபேசிப் பரிதபிக்க, பெருமான் திருவுள்ளங் கனிந்து ஐயா! நாளையதினம் திருவோணத்துடன் கூடிய சோமவாரம் மகாப்பிரதோஷ காலமானதால், இக்காவிரிப்பூம் பட்டினத்தையடுத்த திருவெண்காடென்னுந்திருப் பதியையடைந்து சிவலிங்கப் பெருமானைத் திருமஞ்சனமாட்டிப் பூசித்து அச்சந்நிதியி லிருப்பையேல், ஒருவேதியர் நீ அருச்சித்தற்கு ஒரு சிவலிங்கப் பெருமானைத் தந்து திருவெழுத்தைந் தினையுமுபதேசித்து, பூசிக்குமுறைமையினியு மனுக்கிரகிப்பர் நீயவற்றைப்பெற்று நீடூழி வாழ்கவென ஆசீர்வதித்து தனது திருக்கரத்தால் அவர் நெற்றியில் திருநீறிட்டு மறைந் தருளினர்.

திருவெண்காடர் கண்விழித்து ஆராமையுடன் அழுது தொழுது, தம்மன்னேயை வணங்கித்

தாங்கண்ட கனவினைக்குறிப்பினி லுணர்த்தினர். தாயார் பெருங் களிப்பினை யடைந்து, மகனுரை யெடுத்து உச்சிமோந்து, முதுகைத் தடவி வாழ்த்தினர்.

## திருவெண்காடு சேர்தல்.

பொழுது விடிந்தவுடன், திருவெண்காடர் தமதருமைத் தாயாரைத் திருவெண் காட்டுக்குப் போகும்படி முன்னனுப்பிச் சிவார்ச்சனைக்குரிய திரவியங்களுடனே தாமும் சில சிவநேசப்பெரியோருமாகப் புறப்பட்டுச்சென்று, அத்திருப்பதியை யடைந்து, காவேரியுல் நீராடி, விபூதி உருத்திராக்கமணிந்து, அடியார்களைப்பூசித்து, அவர்கட்கு வேண்டு வனவீந்து, மாடவீதி வலம்வந்து, ஆலயமடைந்து, கோபுரத்தைப் பணிந்து, கோயிலுட் புகுந்து, கணபதி சந்நிதியிற் சென்று, அருள் விடைப் பெற்று; திருநந்தியைப் பணிந்து, சிவபெருமானையும் மகாதேவியாரையும் அருச்சித்து வீற்றிருந்தனர்.

## குருதரிசனம்.

அப்போது அங்கே முருகக்கடவுளானவர் சைவவேதியப் பிரமசாரியொருவர்போல் வந்து, ஐய திருவெண்காட! உன்னைப் பார்க்கவேண்டுமென்னும் விருப்பத்தாலே யிங்குவந்தோம். உன்னெண்ண முழுவதும் யாமறிந்துள்ளோம் அக்கருத்து நிறைவேறுமாறு செய்குது மென்றனர்.

உடனே திருவெண்காடர் தான் கனவிற்கண்ட கோலத்தினைப் போல்விளங்கும், பரமகுருவினைத் தரிசித்து ஆராமையுமன்புமேலிட அடியற்ற பனை போலவர்டயில்வீழ்ந்து, விதியால்வணங்கி நிற்க, அவ்வாசிரியர் பட்டுப்பரி வட்டஞ் சாத்தி மூடி வைத்திருந்த சம்புடத்தை ஒரு பீடத்தின்மேல்வைத்து மூடியிருந்த கவுசனையை வாங்கினர். அப்போ தங்கிருந்த யாவரும் அச்சம்புடக்கோயிலைக்கண்டு ஒன்றுந் தோன்ருது பிரமை கொண்டனர். திருவெண்காடர் குருவின்றிருவடிகளிலே பலமுறை பணிந்து கண்மாரிசொரியத் துதித்து நின்ருர்.

## சிவதீட்சை.

பிரமசாரியாய் வந்ததேசிகர் திருவெண்காடரை நோக்கி ஐய! நேற்றிராத்திரி எனது கனவில். ஓர் சைவ வேதியர், வந்து. நாளைக்காலையில் சுவேதாரணியமென்னும் ஆலயத்திற்குச் செல்வையேல் அங்கு திருவெண்காடென்றும் ஓர் சிறுவன் வந்திருப்பான், அவனுக்குக் கிரமப்படி ஸ்ரீ பஞ்சாட்சரத்தை யுபதேசித்து. அவன் பூர்வ ஜென்மத்திற் பூசித்த ஆன்மார்த்தமாகிய சிவலிங்கமூர்த்தி யிருக்கின்றஇச்சம் புடத்தைக் கொடுப்பாயாகவென்று சொல்லி ஓர் சம்புடத்தைக் கொடுத்து, இ:து அத்திருவெண்காடர் கரத்தாற்றிறந்தாலன்றி பிரம விஷ்ணு முதலிய தேவர்களாலுந்திறக்க முடியாது என்று கட்டளையிட்டு மறைந்தார் எனக் கூறினர்

பின்பு பிரமசாரியாய் வந்த குருநாதர் திருவெண்காடரை அத்தலத்து மூக்குளநீரில் முழுக பண்ணி, திருவெண்ணீறும் உருத்திராக்கமணியும் அணிவித்து. பஞ்சாட்சரத்தைஉபதேசித்து. சைவ சப்புடத்தை யையெழுந்தருளச்செய்து அதன் மகிமையை யாவருக்கும் விளக்கும்பொருட்டு அங்கிருந்த ஆதிசைவ வேதிய ரொவ்வொருவரையுமழைத்து அச்சம்புடத்தைத் திறக்கும்படி சொல்ல, அவர்கள் தம்மாலியன்றமட்டுந் திறக்க முயன்றும் திறவாததைக் கண்டு திருவெண்காடரைத் திறக்கச் சொன்னார். அவர்சுவேதாரணியப் பெருமானைந் தோத்தரித்துப் பணிந்தெழுந்து பஞ்சாட்சரத்தியானத்துடன் தமது திருக்கரத்தாற்றொட்டவுடன் அச்சம்புடம் திறக்கப்பெற்றது. அதில்சிவலிங்கமூர்த்தியொன்றும், விநாயக மூர்த்தியொன்று மிருக்கக் கண்டனர். அன்றைய தினம் ஆவணித் திங்களும் திங்கட்கிழமையும் ஓணமும் பதின்மூன்று நாளுங் கூடிய பிரதோஷ காலமானதால் உடனே பூசை செய்யும்படி குருசுவாமி கட்டளையிட்டனர்.

## சிவபூசை

திருவெண்காடர் நீராடி, ஆசமனஞ்செய்து, பிராணாயாமமுடித்து, பஞ்சாட்சரந்தி யானித்து, பஞ்சசுத்திபண்ணி அருக்கியமமைத்து உடையவரை வேதிகையி லெழுந்தருளப் பண்ணி, அந்தர்யாக பூசைசெய்து, திருமஞ்சன மாட்டு வித்து, ஒற்றுண்ட சாத்தி, வெண்பட்டாதியா லலங்கரித்து,

நறும்பூக்களால் அருச்சித்து சுத்த போனக வகைகளால்நிவேதித்து, கற்பூரவாலாத்தி யெடுத்து, அன்பு பெருகத்திராவிட வேத பாராயணஞ் செய்து ஆனந்தக் கூத்தாடி, தொழுது பூசை முடித்து உடையவரைப் பெட்டகத்திலெழுந் தருளப் பண்ணி, சிவப்பிரசாதத்தினை யுட் கொண்டு அலைவற்ற சிந்தையரா யெழுந்தருளி யிருந்தனர்.

## தாயாருடன் மகேசுரபூசைக்காக வுசாவுதல்.

திருவெண்காடர் சிவனடியாருக்குத் தட்சணை கொடுக்கநினைத்து அன்னையாரிடஞ் சென்று, தாயே! தேவரீர் கருணையினால் சிவ பூஜையாவும் செய்து முடித்தேன். இனிச்சங்கமமூர்த்திகளாகிய சைவ மகேச்சுரறென்கிற அடியாரைப் பூசித்தல் வேண்டும் அதற்கு வேண்டிய திரவியந் தந்தருள வேண்டுமென்றனர். அம்மையார், குழந்தாய்! நம்மிடத்தி லிருந்தபொருள் முழுவதும் செலவாகி விட்டபடியால் இனிக் கடன்வாங்க வேண்டிய தொழிய வேறுவழியில்லை என் செயலா மென்றனர் அப்போது திருவெண்காடர் சற்று மனங்கலங்திச் சிவத் தியானத்துடன் படுத்துறங்கினர். அம்மையாருங் கவலையுற்று அவாருகே படுத்தனர். அப்போது அவர் கனவில் ஒரு சைவ வெதியர் எதிரினின்று அப்பா! திருவெண்காட! பயப்படவேண்டாம், அளவற்ற திரவியம் உன் வீட்டிலிருக்கும்படிச் செய்தோம் அவற்றை யெல்லாம் நினது இஷ்டப்படி அடியார்கட்குக் கொடுத்துப்பயன் பெறலாமென்று அருளிமறைந்தனர். திருவெண்

காடர் உடனே நித்திரை விட்டெழுந்து நடந்த வண்ணம் தாயாருடனுரைத்து. சூரியோதயத்தை எதிர் பார்த்துக்கொண்டிருக்கையில், காவிரிப்பூம் பட்டனத்திலிருத்து தமது வீட்டினைக் கார்த்துக் கொண்டிருந்த சிலர் ஓடோடி வந்து அம்மை யாரைக் கண்டு, அம்ம! இன்று நமது வீட்டில் அர்த்த இராத்திரியில் ஒரு சோதியுண்டாகி விளங் குகின்றது அதனைத் தெரிவிக்க வத்தோமென்றனர் உடனே அம்மையார் தம் புதல்வருடன் காவிரிப் பூம் பட்டினம் வந்து தம் மனையில் அபாரமான பெருஞ் செல்வ மிருக்கக் கண்டு அதிசயித்துத் திருவருளைக் கொண்டாடி, தமக்கு வேண்டு மளவு எடுத்துக் கொண்டு, திருவெண் காட்டினுக்குச் சென்று தமது மைந்தரைத் தனதிஷ்டப்படி செய் யலாமென்றனர். திருவெண்காடர் தமது ஆசிரிய ரையும் அந்தணர் முதலான சிவனடியார்களையும் பூசித்துப்பணிந்து நின்றனர் ஆசிரியர் அந்தணர் முதலியோர் சாது சங்க வழிபாடு மென்மேலும் வளரக்கடவதென்று ஆசீர்வதித்தனர். அதுமுதல் திருவெண்காடர் குரு பூசையும், சிவபூசையும், அடியார் பூசையு நடத்தி வந்தனர்.

## தி ரு ம ண ம்.

இங்கனம் வாழ்ந்து வருகையில் திருவெண் காடருக்குக் காளைப்பருவ நேர்ந்ததைத் தாயார் கண்டு, அக் காவிரிப் பூம்பட்டினத்திலேயே வேளாண்டகைமையிற் சிறந்த வைசியர் குலத்தில் சிதம்பர செட்டியாருக்கும், சிவகாமியம்மை யாருக்

கும் பிறந்த சிவகலை யென்னும் பெண்மணியைப் பேசித் திருமணமுடித்து வைத்தனர். திருவெண்காடர் சிவகலையாருடன் இல்லறத்தைக் குறைவற நடத்தி வந்தார்.

## சிவசருமர்.

திருவெண்காடருக்கு முத்பத்தைந்து வயதளவும்புத்திரப் பேறுண்டாகாமையின் மலம் வருந்தித் திருவிடைமருதூர் மகாலிங்கமூர்த்திக்கு விண்ணப்பித்தார் அப்போது அம்மருதூர் சிவபெருமான் இவருக்குப் புதல்வராக அவதரிக்கவெண்ணினார். அத் திருவிடைமருதூரில சிவசருமர் என்னும் வேதியரொருவர் சுசீலையென்னும் பத்தினியாருடன் இல்லறநடத்தி மாகலிங்கநாதரையும் பெருந்தன நாயகியாரையும் அருச்சித்துதம்செல்வத்தையெல்லாம் சிவார்ச்சனைக்கும், அடியார் மகேச்சுரபூசைக்கும் உபயோகித்து வருகையில் திருவருளால் நாளுக்குநாள்செல்வங்குறைந்து வறுமையடைந்தார் ஆதலின் ஒருநாள் அப்பூசைக்குரிய உபகரணங்களில்லாமையால் சிவசருமர் மிக்கதுயரமுற்றுத் தனது மனைவியார் குழைந்தைகட்காக எடுத்து வைத்திருந்த பண்டங்களைக்கொண்டு திருக்கோயிலையடைந்து வழக்கப்படி சிவபூசை நிவேதனமுதலியவற்றை முடித்து அடியார் பூசைசெய்யும்பொருட்டுத் தமதில்லிற்கேகப் புறப்பட்டனர், அப்பொழுது மருதூருடையார் விருத்த வேதியராய்த்தோன்றிப் பசியால்வருந்துமெமக்கு அமுதளிப்பாயோ வெனக்கேட்டு சிவசருமரால் அவ்விடத்திற்றனே உண்

டிமுதலியவற்று லுபசரிக்கக்கொண்டு, பலருக்கு ஆகும்படி சேகரித்திருந்த எல்லாநிவேதன அன்னத்தையும் உண்டு மறைத்துவிட்டனர். உடனே சிவசருமர் வேதியராய் வந்தவர் முதல்வனென்றறிந்து பேரானந்த முற்றுத்தொழுது தோத்தரித்துத் தமது மாளிகைக்குப்போய் நிவேதனப் பிரசாதமெல்லாம் மருதப்பெருமானுக்கு உபயோகமாயிற்றென்று நிகழ்ந்ததைத் தனது மனைவியாருக்குக்கூறினர். அதைக்கேட்ட பெண்கள் நாயகமாகிய சுசீலை மிக்க சந்தோஷித்தவராய்த் தமதில்லிற்கு வந்திருக்கும் சிவனடியார்கள் பசியால் வருந்துவதைப்பார்த்து இவர்கட்கெவ்வாறு பசியாற்றுவதென யோசித்துத் தன் கழுத்திலிருந்த திருமாங்கலியத்தைக்கழற்றி இதைமாறி வந்த விலைக்குப் பொருள்கொண்டு அமுதுபடி முதயவற்றைச்சேகரித்து வரும்படி தங்கணவர் கையிற்கொடுத்தார். சிவசருமர் அதை வாங்கிச்சென்று அவ்வாறே சேகரித்துக்கொணர்ந்து கொடுக்க சுசீலையார் அதில் வேண்டுமளவு பாகஞ்செய்து சிவனடியார்கட்கு அளித்து உபசரித்தனுப்பிக் கணவருந் தானும் பிள்ளைகளும் உண்டுசுகித்தனர்

மறுநாள் சிவசருமர்எஞ்சிய பண்டங்களைக் கொண்டு ஆலயத்திற் சென்று நியமப்படி பூசைமுடித்து நிவேதனப்பிரசாதத்தினைப் பரிசாரகர்களைத் தமதுதிருமனையிற் சேர்ப்பிக்கத் திட்டஞ்செய் தனுப்பிவிட்டுத் தாம் ஸ்ரீ. பஞ்சாட்சரத் தியானத்திலிருந்தார், பரிசாரகர்கள் அவற்றைத் திருமடப்பள்ளி

யில் வைத்துவிட்டு தமது உச்சிக்கடன் முடிக்க அவ்வாலயத்தின் கண்ணுள்ளகாருண்யாமிருததீர்த்தத்திற்குப் போயினர். அப்பொழுது மருதவாணர் முன்போல ஓர்வையோதிக வேதியராய்ப் பசித்து வர அதைக்கண்ட சிவசருமர் எதிர்சென்றுபசரித்தழைத்துவந்து ஓராசனத்திருத்தி நிவேதன வமுதைப் படைத்தார். பெருமான் அன்றும் அப்பிரசாதத்தினைச் சிறிது மீதியிராதபடியுண்டு, இளைப்பாறுவர்போல் ஓரிடத்திலிருந்து, செல்வதினைவிரும்பி கேட்க எதிரில்நிற்கும் சிவசருமரை நோக்கி நுமது திருமனையில் வந்திருக்கும் சிவனடியார் பசியால் வருந்துகின்றன ராதலின் விரைவிற்சென்று அவரை யுபசரிக்கக்கடவீரெனக்கூறி மறைந்தருளினர் அதைக்கண்ட சிவசருமர் பிரிவாற்றாமையால் தாயைப்பிரிந்த கன்றைப்போல் வருந்தி, உலையிட்ட மெழுகுபோலுருகி, அக்கினியில் விழுந்தபுழுப்போற்றுடித்து, அடியற்ற பனைபோல் விழுந்து பணிந்து நின்றார்.

இங்ஙனம் மிருக்க மருதூருடையார் சிவசருமராகவும் கணத்தலைவர்கள் பரிசாரர்களாகவுந்திருவேடம் பூண்டு நிவேதனப்பிரசாதங்களை வழக்கம்போற் கொணர்ந்து சுசீலையார் கையிலளித்து அடியார்கட்குப் பரிகலந்திருத்தி இடம் பண்ணுதி இதோவருகிறோ மெனப் பரிசாரகர்களுந்தானும் போக்குக்காட்டி மறைந்னர். பிறகு ஆலயத்திலிருந்த சிவசருமர் ஒருவாறு தெளிந்து இறைவன் கட்டளைப்படி தனது மனைக்கேக சுசீலையார் கண்டு

நிவேதித்த பிரசாதங்களைக் கொணர்ந்து கொடுத்து இதோ வருகிறேமெனப்போன நீங்கள் இவ்வளவு நேரம் யாண்டோகினீரென வினவினர், அதைக் கேட்ட சிவசருமர் திடுக்கிட்டு இதுவெல்லாம் எம் பெருமான் திருசெயலென் றெண்ணி நடந்த விருத்தாந்தங்களைச் சுசீலையாருக்குக்கூறி தாம் சேகரித்திருந்ததினும் பதின்மடங்கு அதிகமான சுவை மணம் அளவு முதலியவற்றாற் சிறந்த பிரசாதத்தினை அடியவர்களை யுண்பித்துத் தானும் மனைவி மக்களுடன் உண்டு சுகித்தனர்.

அப்பொழுது சுசீலையார், இங்ஙனம் அருள் செய்த பெருமான் சிறிதுபொருளனுக்கிரகிக்க வொண்ணாதோவென நினைத்து மௌனத்திருந்தார், அன்றிரவில் அதையறிந்த சிவபெருமான் சிவசருமர் கனவிலும்சுசீலையார் கனவிலும் விருத்த வேதியராய்த்தோன்றி நீங்கள் எம்பால் மிக அன்புடையீரானபடியால் நாம் நாளைக்காலையில் நம் கோயிலுக்கருகில் காருணியாமிர்த தீர்த்தக்கரையின் கிழக்கிலுள்ளவில்வமரத்தடியில் ஒரு குழதை வடிவங் கொண்டிருப்போம் நீங்கள் எம்மையெடுத்துக் கொண்டுபோய்க் காவிரிப்பூம்பட்டனத்தில் புத்திரப்பேறின்மையால் வருந்தி யருந்தவம்புரியுந் திருவெண்காடருக்கீந்து அவர் கொடுக்கும் பொன்பெற்று வறுமை நீங்கி வாழக்கடவீரென்று திருவாய்மலர்ந்தருளினர்.

அதுகேட்ட சிவசருமர் திடுக்கிட்டு சிவ சிவ! எனதி வறுமையின்கொடுமையால் அரிபிரமாதி

தேவர்களுங் காணுதற்கரிய எம்பெருமானைக்கொடுத்துப் பொன் பெற்று இவ்வுலகில் வாழ்வதைவிட தீப்பாய்ந்தேனும் புனற்பாய்ந்தேனும் விடமுண்டேனு முயிர்துறத்தல் நலமெனக்கூறிப்பலவாறு வருந்தினர். வேதியராய்வந்த பெருமான் சிவசருமரைநோக்கி நுமது நிலைமையும் நும்மனைவியார் திறமும் யாமுணர்ந்தனம். முன் நமது தோழனாகிய குபேரன் திருவெண்காடராகப்பிறக்க நேரிட்டது அக்காலத்து அவனைப் பிறவித்துன்பத்தினின்மீட்குமாறு மகவாய்வந்து மெஞ்ஞான நிலையினை யனுக்கிரகிப்பதாய் யாம் வாக்களித்தனம் அதை நிறைவேற்றும்பொருட்டு நும்மையிவ்வாறு ஏவினோமாதலின் நீர் ஒன்றிற்கு மஞ்சாது யாங்கூறிய வண்ணம் நிகழ்த்துமின், யாமவண்சிலநாளிருந்துமீளுகையில் நுமக்கும் நுங்குடும்பத்தாருக்கு முத்தியளிப்போமெனத் திருவாய் மலர்ந்து மறைந்தனர். உடனே சிவசருமர் விழித்தெழுந்து படுக்கையின்று நீங்கி திருநீறணிந்து சிவதியானஞ் செய்தனர் இவர் கண்ட கனவையே கண்டரண்டெழுந்த விவர்மனைவியார் தாங்கண்ட கனவை யிவருக்குக் கூற இவர் தாங்கண்டதைக்கூறி இருவரும் அற்புதமு மானந்தமுமுற்றனர் பொழுதுவிடிந்வுடன் இவ்விருவரும் சிவாஞ்ஞைப்படி மனைகடந்து ஆலயத்திற் புகுந்து அம்மை யப்பரை வணங்கிக்கொண்டு கனவிற் குறித்த விடத்தை நாடிச் சென்றனர் அங்கு இளங்குழந்தை அழுகுரல்கேட்க சிவசருமர் அருகிற்சென்று அந்தக்குழந்தையை ஆவலுடனெடுத்து மார்போடணைத்து உச்சிமோந்து

அன்பே! அரசே! அழகே! அறிவே! அற்புதமே! அரும்பொருளே! என்று பலவகையாகக்கூறி மகிழ்ந்து, சுசீலையார் கையிற் கொடுக்க அவர் வாங்கி மார்பொடணைத்து கண்ணொற்றி மோந்தள்ளி முத்தங்கொடுத்து மாதவமே! ஆதரவே! காலிகெட வந்த கற்பகமே! கண்ணுக்கினிமையே! காதற் பெருக்கே! எனச்சீராட்டி அக்குழந்தையைப்பிரிய மனமெழாமல் தனது நாயகரைநோக்கி, எம்பெருமானே! இக்குழந்தையை நான் ஒருவருக்குங் கொடேன்! கொடேன்! பொருள் வேண்டுமானால் வேறுவகையால் பெறமுயலுவோம் நமது மனைக்குப்போவோம் வாரும் என்று சொல்லித் தம் வீட்டுக்குக் குழந்தையை யெடுத்துக் கொண்டுபோக சிவசருமரும் பின் சென்றார். அப்படிப் போகும்போது சிவானுக்கிரகத்தால் திசைதப்பித்திகைத்து ஒரு முகூர்த்தப்பொழுதில் காவிரிப்பூம் பட்டினத்தையடைந்து பசியால்வாடி ஒரு சோலையிற்றங்கி இளைப்பாறி யிருந்தனர்.

## கனாத்திறம்.

இங்ஙனமாக முந்தியவிரவில், புத்திரப்பேறின்றி மனம்வருந்திச் சிவபூசை அடியார் பூசைகளைக் குறைவற நடத்தி வரும் திருவெண்காடர் கனாவிலும் அவர் மனைவியார் கனவிலும் மருதவாணர் சைவவேதியரா யெழுந்தருளி பேரன்புடையீர்! நாளையதினம், உங்கள் மனைக்குச் சமீபத்துள்ள சோலையிற்போவீரானால், சிவசருமர் என்னும் ஓர் ஆதிசைவரும் அவர்மனைவி சுசீலையாரும்

ஒரு சிறு பசுங்குழந்தையை வைத்துக் கொண்டிருப்பர் அத்தம்பதிகளை உபசரித்தழைத்து வந்து மகிழச்செய்வீரேல் அக்குதழந்தையையுங்கட்குத் தருவர் அக்குழந்தை நிறையளவு பொன்னை அவர்களுக்குக்குக் கொடுத்தனுப்பி விட்டு அக்குழந்தைப்பெற்று வாழக்கடவீரென்றுசொல்லி மறைந்தனர்.

## குழந்தையைப்பெற்றது.

உடனே திருவெண்காடரும் சிவகலையம்மையாரும் விழித்தெழுந்து இருவர்கனவும் ஒத்திருத்தலையும், வலத்தோள் வலக்கண், துடித்தல் முதலிய நற்குறிகள் தங்கட் குண்டா யிருத்தலையுங்கண்டு மகிழ்ந்து பொழுது விடிந்தவுடன் நித்தியக்காலைக் கடன்களையுஞ் சிவபூசையையும் அடியார் பூசையையு முடித்துவிட்டுச்சிவபெருமான் கட்டளைப்படி இருவரும் சோலைக்குள்ளேபோய் அங்கிருந்த சிவசருமரையும் அவர் பத்தினியாரையுங்கண்டு இனியமொழி கூறிஉபசரித்தனர். உடனே சுசீலையார் சிவாஞ்ஞையால் தங்கொள்கைமாறிச் சிவகலையம்மையாரைக்கண்டு, அம்மே! நீர்மிக நல்லவராகக் காண்கின்றீர் இக்குழந்தையைப் பொருளாசையால் வேறொருவருக்குகொடுக்க என்கணவ ரெண்ணியுள்ளார் நான் உமக்குக் கொடுக்கின்றேன் வளர்த்துக்கொள்வீரென்று சொல்லிக் குழந்தையை அவர் கையிற்கொடுத்தார். சிவகலையார் ஏந்தி வாங்கிக்கொண்டு பெருமகிழ்வு பெற்றுஅன்பிற் பெருகிய பாலையூட்டிப் பசியாற்றித்தங்கணவர்

கைற்யிற்கொடுக்க, அவர் வாங்கி உச்சிமோந்து முத்தமிட்டு பெருமகிழ்வடைந்து மீட்டு மனைவியார் கையிற்கொடுத்தனர். உடனே சிவசருமர் திடுக்கிட்டு நான் கண்டகனவென்ன நம் மனைவி செய்த காரியமென்ன இக்குழந்தையைத் திருவெண்காடருக் கன்றோ கொடுக்க வேண்டும், என்று சிந்தித்து திருவருட்டோற்றத்தால் திருவெண்காடரிவரேயென வறிந்து ஆனந்தித்தார்.

பின்பு திருவெண்காடர் சிவசருமரையும் அவர் மனைவியாரையும் அழைத்துப்போய்ப் பலவகையாலும் உபசரித்துக் குழந்தையைப் பலவாபரணங்களா லலங்கரித்து மணித்தொட்டிலிலேற்றி இரவலர் யாவருக்குமிடிகெட நிதி வழங்கிக் களித்திருந்தனர். அப்பாலொருநாள் "ஓ சிவசருமரே! திருவெண்காடரே! உங்கட்குக் கனவிற் கட்டளையிட்டவாறு விரைவில் நிகழ்த்துமின்," என ஓர் அசரீரிவாக்குண்டாயிற்று வெண்காடர் அதைக்கேட்டுத் திடுக்கிட்டு ஒருதுலை தருவித்து, ஒருதட்டில் மெல்லிய அணையைப்பரப்பி அதன் மீது தெய்வக்குழந்தையைக் கிடத்தி மற்றொரு தட்டில் பொன்னையும் மணியையும் சொரிந்தார் அங்ஙனம் வெண்காடர் எவ்வளவு பொன்களைப் பெய்தாலும் சிவானுக கிரகத்தால் பொன்னிடுந் தட்டு மேலெழுந்தே நின்றது அருகிலிருந்த சிவசருமர் "இடைமருதாருடைய எந்தைபிரானே இங்ஙனம் அளவுகடந்த பொன்னைக்கொடுத்தால் அதைபாதுகாத்தற்கே என் வாழ்நாள் முழுதுமாய் விடும் பின்யானுய்வதெங்ஙனம் அன்றியும் இவன்

பொருள் விழைவால் திருவெண்காடரை ஜாலஞ்செய்து வஞ்சிக்கவந்தவனென்று சிலர் நினைக்கவும் ஏதுவாகும், எம்பெருமான் கருணை ஏழையேனை யுய்விக்கவென்றிருப்ப துண்மையாயின் இத்துலைத்தட்டிவ்வளவில் சமநிலையடைக, என்று மனதில் நினைத்து வணங்க, உடனே துலைத்தட்டு திருவருளால் சமநிலைபெற்றது திருவெண்காடர் அத்துலைத்தட்டிலிருந்த பொருள்களனைத்தையும் சிவசருமருக்கீந்து வணங்கி மற்றொரு தட்டிலிருந்த மகவையெடுத்து நவமணித் தொட்டிலிற் கிடத்தி அன்றைய தினமே அத்தெய்வக்குழவிக்கு "மருதவாணன்,, எனத் திருநாமஞ்சூட்டி

ஓம் மஹாதேவாய நம:

# ஸ்ரீ மருதவாணர் தாலாட்டு.

## காப்பு.

மாமருத வாணர் மகிழ்ந்திருத்தாலாட்டி யம்பப்
பூமருவு மானைமுகன் பொன்னடிகள் காப்பாமே.

## தாலாட்டு.

சீராரு மிடை மருதர் திருவருளால் வந்தருளும்
ஏராரு மெங்கள்குல இன்னமுதே தாலேலோ
பொன்னிவளம் பெருக்கிப் பூமாதினிதிருக்கும்
சென்னிவள நாட்டிலுள்ளோர் செய்தவமே தாலேலோ
தேனோ வமுதமோ தித்திக்கும் செங்கரும்போ
கோனே மெனவிளங்கு குலமணியே தாலேலோ
சிவசருமர் நற்றவத்த செவ்வேவன்னத்திகழும்
பவமகற்று மெங்கள்தவப் பாலகனே தாலேலோ

பெண்கள் திலகமெனப் பேசுஞ் சுசீலையிரு
கண்களிப்ப வந்தருளுங் காதலனே கண்வளராய்
பொன்னே மணியே புகழு மதுரக்கனியே
தன்னேரிலாத வெங்கள் தவக் கொழுந்தே தாலேலோ
விண்ணவர்கள் போற்றிசெய வில்வமற நிழலில்
மண்ணவர்கள் கண்களிப்ப வந்தவனே தாலேலோ
தவநேசம் வாழ்ந்திருஞ் சீர்த்தண்புகார் நகரோங்கு
சிவநேசர் ஞானகலை செய்தவமே தாலேலோ
கோடைக்குளிர் தருவே கோதிலா நீருற்றே
பேடையிளந் தென்றல் தருமென் சுகமே தாலேலோ
பூசைபுரி வெண்காடர் பொன்னிறைக்கு மன்னிறைபோல்
ஆசைமகவாய் வந்தமர்ந்தவனே தாலேலோ
அருந்ததியே போலுமெங்களம்மை சிவகலையின்
திருந்துமனங்களிப்பவரு சேயோநீ கண்வளராய்
பிள்ளைகலிதீரப்பிறந்து மருதீசரெனும்
வள்ளலருளால்வந்த மாமணியே தாலேலோ
உற்றுருபெற்றுரு ஞாரருவாழ்த்தி மனங்
கற்றுவிற்காதலிக்குங் கண்மணியே கண்வளராய்
சிதம்பரவிப்போற்றி யெங்கள்நின்மலற்குத்தொண்டாற்று
சிதம்பரவேள்சிவகாமி செய்தவமே தாலேலோ
கன்னலோதேனோ கனிரசமோ கற்கண்டோ
இன்னமுதோவெங்களிருநிதியோ தாலேலோ
மின்னொளியோ கண்ணொளியோ விளங்குமணி யொளியோ
பொன்னொளியோ செய்தபுண்ணியமோ தாலேலோ
கிஞ்சுகவாயஞ்சுகமே கேடில்பூம் பட்டினத்தார்
தஞ்சமெனவந்தருளுந் தண்மதியே தாலேலோ

கிண்கிணிகளார்ப்பக்கிளரரை ஞாண்சோதிசெய
பண்ணின் மழலைபயில் பண்ணவனே தாலேலோ
பைந்தாரணிந்தவெங்கள் பட்டினத்தார் போற்றவரு
நந்தாவிளக்கனைய நாயகமே தாலேலோ
நல்லவளப்பொன்னிநதி சூழ்பூம் பட்டினத்துப்
பல்லவன்னாதனருள் பைங்கிளியே தாலேலோ
நல்லறத்தின்வித்தே நாடுஞ்சுகக் கொழுந்தே
இல்லறத்திற்கின்பமருளுமெங்கோவே தாலேலோ
தண்கடலுங்காவிரியுஞ் சாருநீராடுமெங்கள்
கண்குளிறவந்தருளுங் கற்பகமே கண்வளராய் தாலேலோ
கண்டவர்கள் கொண்டாக்காணார்கள் வேட்கைகொள
மண்டலத்தில்வந்தருளிய மாமணியே தாலேலோ
தாயாவனேசத்தந்தையுமே யாவனந்தச்
சாயாவனேசனருள் தன்முத்தே கண்வளராய் தாலேலோ
பெற்றவர்கள் தந்தவமே பேணார்குலமணியே
நற்றவர்கள்வாழவரு நல்லமுதே தாலேலோ
வெண்காட்டுமுக்குளத்தில் வாரும்பிரீ ராடுமெங்கள்
பண்காட்டு மழலை மொழிப்பாலகனே தாலேலோ
கருப்பிசைகள் சோலைகள்சூழ் சுவேதவனநாதனருள்
கரும்பனையதீஞ் சொற்கண்மணியே கண்வளராய் தாலேலோ
காமருவுபூம்புகார்க் கண்ணமர் வெண்காடர்பெறு
மாமருதவாணனென் மகவேநீ கண்வளராய் தாலேலோ
மையிட்டுநீறுமிட்டு மாமணிப்பூந் தொட்டிவிட்டு
கைதொட்டிசைபுகல்வோம் கண்மணியே கண்வளராய்
கூரார் பொழில்புடைசூழ் காவிரிப்பூம் பட்டினத்துச்
சீரார்தனவணிகச் செல்வமே தாலேலோ

மெய்வாய்கண்மூக்கு விரும்புசெவிப்புலன்கள்
உய்வாய்களிக்கவரும் ஒள்ளொளியேகண்வளராய் தாலேலோ
தித்திக்குஞ்செங்கரும்பே தெவிட்டாத தெள்ளமுதே
எத்திக்கும்வாழவரும் எங்கோவே தாலேலோ
முத்தே பவளமே முழுமணியே கட்டிவின்கண்
வைத்தேயிசையுரைப் பேர்ம்வள்ளலே கண்வளராய் தாலேலோ
வற்றாதநீர்நிலையே வாடாதநல்மலரே
பெற்றார்கள்போற்றவருபெம்மானே கண்வளராய்
பண்வளரப்பாட்டிசைப்போம்பரமனருளாற்கட்டிவின்கண்
கண்வளர்ந்துகண்வாதிக்ககண்மணியே கண்வளராய்
நீடாயுளுற்று நிறைசெல்வனன்கு பெற்று
வாடாத கற்பகம்போல் வாழிநீ தாலேலோ

மருதவாணர் மலரடி வாழ்க!

---

புத்திரோத்சவங் கொண்டாடி சிவசருமரையும் அவர் மனைவியாரையும் பொருட் பொதிகளையும் தமது தேரிலேற்றித் திருவிடைமருதூருக்கனுப்பினுர், சிவசருமர் மனைவியாருடன் தமதில்லஞ் சேர்ந்து. திருவெண்காடரால் சிவபெருமானீந்த பொருள்களைக் கொண்டு சிவபூசை அடியார்பூசை பிதிர்க்கடன் முதலியவற்றைக் குறைவற நடத்தி வந்தனர்.

இங்ஙனம்பலதிருவிளையாடல்களை நிகழ்த்திவரும்மருதவாணர் பதினாறுதிருவயதையடைந்து சிவசருமருக்குந்திருவெண்காடருக்கும்முன்வாக்களித்தவண்ணம்முத்திநிலையனுக்கிரகிக்கக் கருதித் திருவெண்

காடரிடஞ்சென்று ஐய! யான்தோணியேறித்தீபாந்தரங்கட்குச்சென்று வியாபாரஞ்செய்து பொருள் சேகரித்து வரக்கருதுகிறே னென்றனர் தந்தையார் கேட்டுத் திடுக்கிட்டு பிள்ளைக்கலி தீர்க்க வந்த பெருமானே உனக்கு வேண்டியசெல்வம் நிரம்பி யிருக்கப் பலதுன்பத்தினை யடைந்து சமுத்திர யாத்திரைசெய்துவருந்திப் பொருள்தேட முயல்வ தென்ன? அன்றியும் உன்னைப்பிரிந்து நானும் உனதன்னையு மெவ்வாறு இவனுயிர் தரிப்போ மென்றுகூறிப் பிரிவாற்ருமையால் வருந்தினர்.

மருதவாணர் தந்தையாரைநோக்கி ஐய! மிகுந்த செல்வமிருப்பினும் இளமைப் பருவத்தில் வருந்தி மேலுமேலும் பொருளைத்தேடுவதன்றே நமது வணிகர்குல வழக்கம் அன்றியும் உலகிய லறியாதார்க்குத் தருமவியலும் கடவுளருளிய லும் புலப்படுவது கடினமாகும். அவ்வுலகிய லறிவதற்குப் பலதேயங்கட்குச்சென்று வருதல் அவசியமாம். அப்படிச்செல்ல விளம்பருவத்தி லன்றி முதுமையிற் கூடாது ஆதலின் எனதெண்ணப்படி சென்றுவர வுத்தரவளிக்கவேண்டு மென்றனர். திருவெண்காடர் தம்மைந்தர் குறிப்பையறிந்து அவர் கருத்தின்படி செய்ய வுடன்பட்டனர். மருதவாணர்வழிச் செலவுக்கும் வியாபாரத்திற்கும் வேண்டுங் கருவிகளையும் பண்டங்களையும் குறைவரச்சேகரித்துப் புதியதொரு மரக்கலத்தில் நிரப்பி மீகாமனொருவனை நியமித்து தந்தை தாயார் சுற்றத்தினர் முதலியோரிடத்து விடைபெற்றுக்கொண்டு

நன்னாளிற் கடற்றுறையடைந்தார். அவ்விடத்தில் இவரது தோழர்களாகிய அவ்வூர் வணிகமாக்கள் சிலர்வாணிபத்தை முன்னிட்டுஇவருடன் கலமேறிச் செல்லக்கருதி அவ்வாறே பற்பல பண்டங்களைக்கொண்டு வந்திருந்தனர். உடனே மருதவாணருமிவரது தோழர்களும் சுப முகூர்த்தத்தில் தத்தங் கலங்களிலேறிச் சென்று ஒருதீபத்தினையடைந்தனர் அவ்விடத்தில் மருதவாணரின் றோழர்கள் தம்பண்டங்களை மாறி வேறுபல தீபத்தினை நோக்கிச்சென்றனர். மருதவாணர் தந்தோழர்களுடன் செல்ல மனமில்லாமல் அவ்விடத்திற்றானேயிருந்து தம்மிடமுள்ளபண்டங்களைமாறில் பொருள் கொண்டு கோயில்கள் சத்திரம் நந்தவனம் தடாக முதலியனவமைத்து வறியர்கட்குவறுமை கெடப் பொருளளித்தும் வந்தனர். முன் மேவறுதீப நோக்கிச்சென்ற வணிகமாக்கள் பற்பல தீவுகளிற் சென்று பொருள் விருத்திசெய்து கொண்டு திரும்பிமருதவாணரிடம் வந்து ஐய! நீரெவ்வளவு திரவியஞ் சேகரித்திருக்கின்றீரென்று கேட்டனர் மருதவாணர்வரட்டியினையும் அவல் கடலையினையுங் காட்ட வணிகமாக்கள் திடுக்கிட்டு எம்மினுஞ் சிறந்த அறிவாளராகிய நீரிவ்வாறுபொருளை வீணிற் செலவுசெய்திருப்பது தகுமோ உமது தந்தையார் கேட்டாலென்சொல்வாரென்று பலவாய்க் கூறினர் மருதவாணவள்ளல் அவர்களை நோக்கி அன்பர்காள் எனது தந்தைய ரிக்கருமம்பற்றி யுங்களை வெறுக்கார் நீவிரென்பொருட்டுத் துயருறலொழி

மின் என்றனர். அதனைக்கேட்ட தோழர்கள்யாவ ரும் மருதவாணர் குணை மாறுற்றனர்போலு மென் றெண்ணி இனி நாமிவரைப் பிரியவொண்ணு தெனத்துணிந்து அங்கு சின்னாள் வசித்தனர்.

பிறகு அவ்வணிகமாக்களும் மருதவாணப் பெருமானுங் காவிரிப்பூம்பட்டினமடையக்கருதித் தாந்தேடிய பொருள்களுடன் தத்தகலங்களிலேறிக் காற்றின்வாய்ப் பறிந்து நாவாயோட்டி வந்தனர் இங்ஙனம் வருகையில்எல்லாம்வல்லமருதப்பெருந் தகையார் ஓர்திருவிளையாடலைச் செய்யக்கருதித் திடீரென்றோர்பெருகாற்று மழையை உண்டாக்கித் தமதுமரக்கலங்களை நெடுநாள்திசைதப்பி போகச் செய்தனர் அதனாலவ்வணிகமாக்கள்குளிரால்வருந்தி யுடல்மெலிந்து தாங்கொண்டு வந்த விறகு முதலி யவுபகரணங்க ளொழிந்து மருதவாணரிடம்வந்து ஐய அநேகநாளாய்க் காற்றுமழையுட்சிக்கிக் கரை துறையறியாது வருந்துவதால் காவிரிப்பூம்பட் டினம்போய்ச் சேரும்வரையிலாவதாகச் சேகரித்து வந்தவிறகுமுதலிய வுபகரணங்களொழிந்து விட் டது காற்றுமழை யெப்பொழுது நிற்குமோ நாம் எங்குள்ளோமோ கலம் எத்திக்குநோக்கிச் செல் லுகின்றதோ ஒன்றுமறிந்தோமில்லை ஆதலின் இத் தருணத்தில் நும்மிடத்துள்ள வரட்டியிற்கொஞ் சங்கடனாகக்கொடுத்து உதவிசெய்யவேண்டுமென் றுபிரார்த்தித்தார்கள். அதனைக்கேட்டமருதவாண வள்ளல் தன்தோழர்களின் வேண்டுகோளுக்கிணங் ந்து தம்மிடத்துள்ளவரட்டியில வர்கள்வேண்டும

ளவு நிறுத்துக்கொடுத்து தமதூரடைந்தவுடன் அவ் வரட்டிகட்கு இடைக்கிடைகொடுப்பதாய்பத்திரமெழுதி வாங்கிக்கொண்டதன்றியும் அதில் ஓர் வரட்டியினையவர்கள் கையால் முத்திரித்தும் வாங்கிக் கொண்டனர். வணிகமாக்க ளதனைப்பெற்றுஉணவு முதலியனவமைத்து உண்டு குளிர் பசிதணிந்து சுகித்தனர். பின்பு காற்றுமழை நிற்க யாவரும் திசையறிந்து கப்பலோட்டிக் காவிரிப்பூம்பட்டினம் வந்து சேந்தனர்.

திருவெண்காடரென்னும்பட்டினத்துச் சீமான் தம்மைந்தனேறிச்சென்ற கப்பல் வந்துசேர்ந்த செய்தியைக்கேட்டுப் பெருமகிழ்சியெய்திக் கடற்றுறையடைந்து கப்பலிலிருக்குந் தம் புதல்வரையழைத்துவரப் படகேறிச் சென்றனர். அப்படிச் செல்லுகையில் மருதவாணரோடு சென்றுவந்த வணிகரொருவன் முன்வந்து ஐய! நுமது திருக்குமாரர் சிலநாளாய்ச்சித்தவிகற்பமா யிருக்கின்றனர் இதனையுமக்கறிவிப்பதற்காகமுந்திவந்தேனென்று சொல்லிப்போயினன் அதனைக்கேட்ட வெண்காட்டடிகள் திடுக்கிட்டுச் சற்றுலோசித்துப் புதல்வரை நமதில்லிற் கழைத்துக் கொண்டுபோய் விகற்பங்களைச் சீர்படுத்திக்கொள்வோமெனத் துணிந்து விரைவிற் சென்று கலம் புகுந்து மருதவாணரைக் கண்டு உச்சிமோந்து தழுவியுபசரித்து ஆங்குள்ள வரட்டி அவல் கடலை முதலியவற்றினைப் பார்த்து உடன் சென்றுருளொருவன் கூறியவண்ணம் நம் புதல்வன்றிவிழந்தனன்போலுமென்றெண்ணிமை

ந்தரைத் தமது திருமாளிகைக் கழைத்துவந்து ஓரறையிலிருக்கச் செய்து மெய்க்காவலரைக் காவலமைத்து மீட்டுங் கடற்றுறையடைந்து தம் மைந்தர் கலத்திற் கொண்டு வந்த வரட்டி அவல் முதலியவற்றினையும் பெட்டி கணக்கு முதலியவற்றினையும் எடுத்து வரச்செய்து மருதவாணரோடு தீவாந்தரஞ் சென்று வந்த வணிகமாக்களெதிரில் அப்பெட்டியைச் சோதிக்க அதில் முத்திரித்த ஓர் வரட்டியும் ஓலைத்துண்டு மிருக்கக் கண்டனர் பின்னுந் திருவெண்காடர் வரட்டியைப் பெட்டியிற்பத்திரப் படுத்தியதற்குக் காரண மென்னவெனவுன்னி அதனைப்பிட்க அதனடுவே கதிரவனொளிபோன்ற மாணிக்கமொன்றிருக்கக்கண்டு வியந்து மற்றைய் வரட்டிகளையுஞ் சோதிக்க அவைகளு மங்ஙனமே யிருந்ததுமன்றி அவல் கடலைகளிற் பொன்மணல் விரவியும் ஓலை வணிகமாக்களெழுதிக்கொடுத்த கடன் பத்திரமாகவுமிருக்கக்கண்டு தம் மைந்தர் திறத்தையெண்ணி யடங்காத களிப்புடையரா யிருந்தனர். வணிகமாக்கள் தம்முள் அச்சமெய்தி மருதவாணர் குணமாறுற்றனரென்று இழிவாய் நினைத்தோமே அன்றியும் அவரிடத்தில் பெற்ற வரட்டினைச்சாதாரணமானதென்று அடுப்பெரித்தொழித்தோமே அவர் பத்திரமெழுதிக் கொடுக்கச் சொன்னதினுலேனுமறிந்திலோமே இப்பொழுது அவர் தந்தையர் அதனையொத்த வரட்டியினைக் கொடுக்கச் சொன்னால் என் செய்வோமெனச் சிந்தித்துக் கொண்டிருந்தனர்.

## மருதவாணர் மறைந்தது.

இங்ஙனமிருக்கையில் திருவெண்காடர் தம் புதல்வரைகண்டு தழுவிக்கொள்ள வேண்டுமென்ற ஆவலுடன் தனது மாளிகைக்குச்சென்று பார்க்கையில் மருதப்பிரானைக் காணது திகைத்து மெய்காவலரை வினவ அவர்கள் தேவரீரிட்ட கட்டளைப்படியே காவல் புரிந்திருந்தனம் தங்கள் திருக்குமாரர் போனவழியறிந்தோமில்லையென்றனர். திருவெண்காடர் கலக்கமுற்று என்ன காரியஞ்செய்தேன் மருதவாணர் திறமறியாது இழிவெண்ணித் தவறிழைத்தேனே யான் அறிவிலர் சொற்கேட்டவமதித்தேனெனக் கருதி என் மனத்தை வருந்தச்செய்து மறைந்தானே வென்று பலவாறு யோசித்து வருந்தி அந்தர்ப்புரஞ் சென்று தன்மனைவியை விசாரிக்க அவர் நம் மைந்தன் வந்து அன்னமுண்டிருந்து இப்பொழுதுதான் புறத்தே சென்றனனென்று கூறி அவன் வாணிபத்தாற்றேடிவந்தெனக்களித்தஆடையாபரணங்களிதோ விருக்கின்றதெனக்காட்டினர். திருவெண்காடர் அதனைக்கேட்டுங் கண்டுந் தன்மனக்கலக்கந் தீராமல் மருதவாணரை நகரமுற்றிலுந் தேடிக்காணது பெருங்கிலேசப்பட்டுக்கொண்டிருந்தனர்.

## சிவசருமர் முத்தி பெற்றது

இங்ஙனமிருக்க மருதப்பெருந்தகையார், திருவிடைமருதூரிற்றன் குடும்பத்தினரோடு பக்குவப்பட்டுக் சிவயோக சமாதியிலிருந்த சிவசருமருக்கு முன் வாக்களித்த வண்ணம் அவர்முன் ஒளிப்பிழ

ம்பாய்த்தோன்றி அச்சோதியில் அவரையும் அவர் குடும்பத்தினரையும் ஐக்கியம்பண்ணிக்கொண்டு இடைமருத மகாலிங்கத்திற் பிரிவறக் கலந்தருளினர்

## பட்டினத்தடிகள் துறவு பூண்டது.

பிறகு திருவெண்காடர் மருதப்பெருமான் பிரிவைச்சகியாமல் உண்டிமுதலியன வெறுத்துக் சிந்தித்துக்கொண்டிருக்கையில் அவர் மனைவியார் ஒரு பெட்டியைக்கொண்டு வந்து நம் புதல்வர் தேவரீர் வந்தவுடன் இதனைக்கொடுக்கும்படி தந்து போயினரென்று கொடுத்தார். திருவெண்காடர் ஆவலுடன் அப்பெட்டியைத்திறந்து பார்க்க அதில்ஒருகாதற்ற ஊசியும் ஓலை நறுக்கு மிருக்கண்டு வியப்புற்று ஓலையைப் படித்துப்பார்க்க "காதற்றவூசியும் வாராது காணுங்கடைவழிக்கே" என்றெழுதியிருந்தது திருவெண்காடராகிய பட்டினத்தடிகள் மருதவாணர். திருநோக்கால் பக்குவப்பட்டிருந்தவ ரானபடியால் ஐம்புலனு மொருநெறித்தாகி.

பட்டைக்கிழித்துப் பருவூசிதன்னைப் பரிந்தெடுத்து
முட்டச்சுருட்டியென்மொய்குழலாள்கையின்முன்கொடுத்துப்
கட்டியிருந்த கனமாயக்காரிதன் காமமெல்லாம்
விட்டுப்பிரிய வென்றோவிங்ஙனே சிவன் மீண்டதுவே

சூதுற்றகொங்கையும் மாதர்கலவியுஞ் சூழ்பொருளும்
போதுற்றபூசலுக் கென்செயலாஞ்செய்த புண்ணியத்தால்
தீதற்றமன்னவன் சிந்தையினின்று தெளிவதற்கோ
காதற்றவூசியைத்தந்துவிட்டானென் கைதனிலே

என்று திருவாய்மலர்ந்து இருவினையற்று உலகினருய்யுமாறு தமது நெஞ்சினை முன்னிலையாக்கி

"வாதுற்றதிண்புய ரண்ணாமலையர் மலர்ப்பதத்தைப்
போதுற்றப்போதும் புகலுநெஞ்சேயிந்தப் பூதலத்திற்
றீதுற்றசெல்வமென் றேடிப்புதைத்த திரவியமென்
காதற்றவூசியும் வாராதுகாணுங் கடைவழிக்கே
வேதத்தினுட்பொருண் மண்ணாசைமங்கையை விட்டுவிடப்
போதித்தவன்மொழி கேட்டிலையோசெய்த புண்ணியத்தா
லாதித்தன்சந்திரன் போலேவெளிச்சம் தாம்பொழுது
காதற்றவூசியும் வாராதுகாணுங் கடைவழிக்கே,,

என்றருளிச்செய்து தாயாரைநோக்கி அம்மே நுமதுதவம்பலித்தது யான் குருநாதனது ஆணை வழியில் நிற்பவனானேன் என்றனர்

தாயார்கேட்டு ஐயனே ! எனக்கிறுதிநாள் சமீபித்திருப்பதால் என் உத்தரகிரியைகளை முடித்தபிறகு உன்விருப்பத்தின்படி போகலாகாதோ வென்றனர். அதனைக் கேட்ட பட்டினத்தடிகள் அப்படியே ஆகட்டுமென்று சொல்லி எதிரில் நின்ற நண்பருந் தலைமைக் காரியக்காரருமாகிய சேந்தனாரை நோக்கி என்பொருள் முழுதினையும் யாவருக்குங்கொள்ளையிடக்கடவாயென்று கட்டளையிட்டு தந்திருமேனியிற்றரித்த ஆடையவிழ்ந்திருந்ததையு முணர்ந்திலராய் வெளிப்பட்டனர். அதுகண்ட அவர்மனைவியாகிய சிவகலையார். அவரைநோக்கி பெருமானே அடிமைக்குத் தேவரீரைவிட ஓர் கதியுமில்லை ஆதலின் நானுந் தேவரீரோடு வருகிறேனென்று பிரார்த்தித்தனர். பட்டினத்தடிகள் அச்சிவகலையாரைநோக்கி பெண்ணே ! யாவருக்குங் கதியாவர் சிவபெருமானே யன்றி

வேறில்லை நீ சிவநேசத்தையும் அடியார்நேசத்தையும்மறவாது வாழ்ந்து சரீராந்தத்தில் சிவபெருமான்றிருவடி நிழலை யடையக்கடவாய் என்னுரை மறுப்பதுனக்கழகல்லவென்று சொல்லி அவரை நிறுத்திவிட்டுச் சென்று அவ்வூர்ப் பொதுமண்டபத்திற் றங்கியிருந்தனர்.

அப்பொழுது அவ்வூராரிற் சிலர் பட்டினத்தடிகள்செய்தியைக் கேள்வியுற்று அவர் வீற்றிருக்கு மண்டபத்திற் சென்று அடிகளைக்கண்டு ஐய! என் செய்தீர் நீர் எங்களனைவருக்கும் முதல்வரன்றோ யாது குறையுளதென விப்பரதேசி கோலங்கொண்டீர் இனி எங்களுக்கு யாவர் துணையாகுவர் என்று இரங்கினர். அதனைச் செவியுற்ற பட்டினத்தடிகள் அவர்களைச் சுட்டி நோக்காமல் பராமுகமாக நோக்கித் திருவருளைச் சிந்தித்து.

"மனையாளு மக்களும் வாழ்வுந்தனமுந் தன்வாசன்மட்டே
யினமானசுற்ற மயானமட்டேவழிக் கேதுதுணை
தினையாமளவெள்ளளவாகினு முன்புசெய்ததவந்
தனையாளவென்றும் பரலோகஞ்சித்திக்குஞ் சத்தியமே

அந்தமும்வாழ்வு மகத்துமட்டே விழியம்பொழுகம்
மெத்தியமாதரும் வீதிமட்டேவிம்மி விம்மியிரு
கைத்தலமேல் வைத்தழுமைந்தருஞ்சுடு காடுமட்டே
பற்றித்தொடருமிருவினைப் புண்ணியபாவமுமே.

எரியெனக்கென்னும் புழுவோவெனக்கென்னுமிந்தமண்ணு
சரியெனக்கென்னும் பருந்தோவெனக்கென்னுந்தான்புசிக்க

நரியெனக்கென்னும் புன்னாயெனக்கென்னுமிந் நாறுடலைப்
பிரியமுடன்வளர்த்தே னிதனாலென்ன பேறெனக்கே.

அன்னை றன்வீதி யரசிருப்பாகு மணிபடையோர்
கண்ணொருகாலொன்பதாமவரேவலுநண்ணுமிவ்வூர்
தண்ணென்பசிக்கு மடைப்பள்ளியான சகமுமெல்லா
மெண்ணிலிகாலமவமேவிடுத்தனமெண்ணரிதே.,

என்னும் நான்கு திருப்பாடல்களால் நிலையாமையைக் குறிப்பின் தனது நெஞ்சினை முன்னிலையாக்கி,

"மாடுண்டு கன்றுண்டுமக்களுண்டென்று மகிழ்வதெல்லாங்
கேடுண்டெனும்படிகேட்டுவிட்டோமினிக்கேண்மனமே
யோடுண்டுகந்தையுண்டுள்ளேயெழுத்தைந்துமோதவுண்டு
தோடுண்டகண்டனடியார்நமக்குத்துணையுமுண்டே

ஆறுண்டுதோப்புண்டணிவீதியம்பலந்தானுமுண்டு
நீறுண்டுகந்தைநெடுங்கோவணமுண்டுநித்தநித்த
மாறுண்டுலாவிமயங்குநெஞ்சேமனைதோறுஞ்சென்று
சோறுண்டுதூங்கிப்பின்சும்மாவிருக்கச்சுகமுமுண்டே

உடுக்கக்கவிக்கக்குளிர்காற்றுவெய்யிலுடங்கிவந்தாற்
றடுக்கப்பழயவொருவேட்டியுண்டுசகமுழுதும்
படுக்கப்புறந்திண்ணையெங்கெங்குமுண்டுபசித்துவந்தாற்
கொடுக்கசிவனுண்டுநெஞ்சேநமக்குக்குறைவில்லையே

நாட்டமென்றேயிருசற்குருபாதத்தைநம்புபொம்ம
லாட்டமென்றேயிருபொல்லாவுடலையடர்ந்தசந்தைக்
கூட்டமென்றேயிருசுற்றத்தைவாழ்வைக்குடங்கவிழ்நீ
ரோட்டமென்றேயிருநெஞ்சேயுனக்குபதேசமிதே

ஒன்றென்றிருதெய்வமுண்டென்றிருவுயர்செல்வமெல்லா
மன்றென்றிருபசித்தோர்முகம்பார்நல்லறமுநட்பு

நன்றென்றிருநடுநீங்காமலேநமக்கிட்டபடி
யென்றென்றிருமனமேயுனக்கேயுபதேசமிதே

என்னும் ஐந்து திருப்பாடல்களால் பெறத்தக்க தின்னதெனஉறுதி கூறிப் பின் வந்தவர்களை முன்னிலையாக்கி

ஊரீருமக்கோருபதேசங்கேளுமுடம்படங்கப்
போரீர்சமணைக்கழுவேற்றுநீற்றைப்புறந்தின்னையிற்
சாரீரனந்தலைச்சுற்றத்தைநீக்கிச்சகலைக்க
வேரீருமக்கவர்தாமேதருவரிணையடியே
கண்ணுண்டுகாணக்கருத்துண்டுநோக்கக்கசிந்துருகிப்
பண்ணுண்டுபாடச்செவியுண்டுகேட்கப்பல்பச்சிலையா
லெண்ணுண்டுசாத்தவெதிர்நிற்கவீசனிருக்கையிலே
மண்ணுண்டுபோகுதையோகெடுவீரிந்தமானிடமே,,

என்னுந் திருபாசுரங்களை இதோபதேசமாக வருளிச்செய்து மௌனத்திருந்தனர் இவர்கூறியதைக் கேட்ட அவ்வூரினர் நாணமுற்று இந்நிலைமையை நாமடைவதுகூடாவிடினும் இவர் கூறிய மொழிகளின் பொருளை யுணர்வது கூட அருமையாமென்று மனங்கூசிச் சென்றனர். இவ்வித மிருக்க அடிகள் கூறியதைக்கேட்ட சேந்தனார் அறத்தின் வழியிலீட்டிய நமது வெண்காடரது நிதிகளைச் சூறையிடல் நியதியேயாவென்று நினைத்து அங்ஙனஞ் செய்யாமல் சற்று நேரம் வாளாவிருந்துபின் எவ்வாறாயினுமாகுக நமது இறைவன் கட்டளைப்படி நடத்துவதே யுத்தமமென நினைத்து நிதிக்குவைகளனைத்தையுந்திறந்து சூறை யிட்டனர்.

## அரசன்சேந்தனாரைச் சிறைசெய்தது

பட்டினத்தடிகள் துறவுபூண்ட செய்தியையும் அவர் செல்வமுழுவதுங் கொள்ளையாகுஞ் செய்தியையும் அந்நாட்டரசன் கேள்வியுற்றுக் கொள்ளையாகாதபடி தடுத்துப் பட்டினத்தடிகள் தமக்கைப் புதல்வரை வருவித்து உரிமை முதலியவற்றை அவருக்குக் கொடுத்து அவர் குடும்பச் செலவினுக்கு வேண்டிய பொருள்களையளித்து எஞ்சிய பொருள்களைத் தனது பொக்கிஷச்சாலையிற் சேர்ப்பித்துத் தருமசாலை முதலியவற்றிற்கு உபயோகிக்கக் கட்டளையிட்டனன் பிறகு அவ்வரசன் சேந்தனாரது உண்மை நிலையறியாது அவரை நோக்கி சேந்தனாரே! நமது திருவெண்காடர் செல்வம் ஏராளமாயினவெனக் கேள்வியுற்றனமாதலின் இன்னுமவர் பொருள் யாண்டுளதெனக்கேட்க, சேந்தனார் அரசனை நோக்கி மகாராஜ! அவர் நிதிமுழுவதுங் காட்டி விட்டேன் இனியொன்றுமறியேன் என்றுகூற அரசன் அவ்வார்த்தையில் நம்பிக்கை யில்லாதவனாய்க் காவலாளர்களைநோக்கி வெண்காடரது நிதிகள் இன்னுமிருக்கிறதைக்காட்டுமளவும் இச்சேந்தனாரைச் சிறைச்சாலையில் வையுங்களென்று கட்டளையிட்டனன் உடனே அக்காவலர்கள் சேந்தனாரைத் தளையிட்டுச் சிறைச்சாலையிலடைத்தனர் பிறகு அவ்வரசன்சேந்தனாரதுகாணியிடம் பொருண்முழுவதும் திருவெண்காடருடையதென வெண்ணிக் கவர்ந்துகொண்டனன் உடனே சேந்தனாரது மனை

வியார் பயந்து தனதுமைந்தனை யெடுத்துக் கொண்டு பிறதேசங்களிற் சென்று கூலிவேலையாற் சீவனம் செய்திருந்தனர்.

அரசன் பட்டினத்தடிகளைக் கண்டது:

பின்பு அவ்வரசன் மண்டபமடைந்து அவன் சிவஞாந நிஷ்டையில் வீற்றிருந்த வெண்காட்டடிகளை நோக்கி ஐயரே! நீரிப் பரதேசிகோலங்கொண்டதனாலாய விசேடமென்னை? என்று வினவ, பட்டினத்துப் பெருந்தகையார் அரசனைநோக்கி நீர்நிற்க நாமிருக்க என்றனர் அதுகேட்ட வேந்தன் வெட்கமுற்றுச் சென்றான்.

பிறகு பட்டினத்தடிகள் பசிவந்தபோது ஊரிற் சென்று தனதிருக்கரத்தாலு மிந்ரதுண்டுதன் சிந்தைமுழுவதும் சிவபெருமான் றிருவடியிற் பதித்தவராய் எப்பொருளினும் விருப்பு வெறுப்பற்ற திறமே மனைவியாகவும் உலகிலுள்ள வுயிர்களே புதல்வராகவும் சிவபெருமானது மெய்யடியார்களே சுற்றத்தினராகவும் அறியாமையே பகையாகவும் அன்பே பொருளாகவும் அருளே இடமாகவும் தத்துவங்களே ஏவலாகவும் சாந்தமே சார்பாகவும் தவமே முயற்சியாகவும் உடைத்தாய் நிரதிசயாநந்தத்திருந்தனர் இவரது நிலைமையறியாத அந்நகரில்வசிக்கும் வைசியர்கள் இவர் பிச்சையேற்றுண்பது தம்மரபினுக்குத்தாழ்வு வந்ததாக நினைத்து அவ்வூரிலிவருக்குப் பிச்சையிடாதவண்ணம்தடைசெய்தனர் அப்பொழுது அடிகள் அவ்வூரவர்பா லிரக்கமுற்று அவர்கட்குண்மையறிவுண்டாகும்படி தான் பசு

மேய்க்குஞ் சிறுவருடன் ஆடியும் குப்பையிற் புரண்டும் தெருவிற்படுத்துக்கொண்டுசிறுவரையேவித் தன்காலிற் பழுதையைச்சுற்றி யிழுக்கச்செய்தும் பித்தரென்று நாட்டார்பழிக்கும்படி குடியிருந்தவீட்டிற்குக் கொள்ளிவைக்கவேண்டுமென்று சொல்லி யுந்திரிவாராயினர்.

திருவெண்காடருக்கு நஞ்சிட்டது

திருவெண்காடரென்னும் பட்டினத்தடிகள் பிச்சை யேற்றுண்டிருப்பதைக்கண்ட அவர்தமக்கையார் மனம்பொறுமல் இவரிறந்தாலும் நன்மையாமெனவெண்ணி விஷங்கலந்த ஓட்டப்பஞ்சமைத்து இவருண்ணக்கொடுப்பித்தனர் அடிகளதனைத் திருவருளாலுணர்ந்து அவ்வப்பத்தை வாங்கி(தன்வினை தன்னைச்சுடும் ஓட்டப்பம் வீட்டைச் சுடும்) எனக்கூறித் தமக்கையார் வாழ்கின்ற வீட்டினிறப்பிற் சொருகினர் உடனே அவ்வீட்டிற் றீப்பற்றி உயிர்கட்குமாத்திரம் அபாயம் நேரிடாமல் அம்மனையுடன்ஊர்முழுமையுமெரிந்தது அதனைக்கண்ட அவ்வூரினரெல்லாம் அடிகளிடத்து வந்துபயந்து முறையிட பட்டினத்தடிகளிரக்கமுற்று தங்களைக் கேட்டுப் (பிறந்திறந்திலம்) என்னுஞ்செய்யுளைத் திருவாய்மலர்ந்து அத்தீயினைத்தணித்துத் திருவெண்காடடைந்து சுவேதாரணியப் பெருமானைத்தரிசித்து (விளக்கினைவையமுய்ய) என்றது முதலியபாடல்களைப்பாடிப் பிச்சையேற்றுண்டு குடியிருந்தவீட்டிற்குக் கொள்ளியிடவேண்டுமென்றுசொல்லிதிரிவாராயினர்,

## திருவெண்காடர் தாயாருக்குத் தகனகிரியை செய்தது.

இங்ஙனமிருக்ககாவிரிபூம்பட்டினத்தில் அடிகளது அன்னையாராகிய ஞானகாலம்மையார் வாழ்நாட்குறுகித்தேகவியோக முற்றனர் உடனேசுற்றத்தினர் வழக்கப்படி ஈமக்கடன்கழிக்க அவருடலை மயானத்திற் கொணர்ந்து சிதையடுக்கிக்கொண்டிருந்தனர் அப்பொழுது திருவெண்காட்டிலிருந்த பட்டினத்தடிகள் தமதன்னை யிறந்ததைத் திருவருளாலுணர்ந்து அங்கு நின்றும்புறப்பட்டுக் காவிரிப்பூம்பட்டினத்து மாயானத்தையடைந்தவளவில் சுற்றத்தினர் அஞ்சியொதுங்கிநின்றனர் பட்டினத்தடிகள் காஷ்டத்தருகிற் சென்று சுற்றத்தினரடுக்கி வைத்த சிதையைத் தள்ளிவிட்டு உலராத வாழைப்பட்டையைக் கொணர்ந்து சிதையடுக்கி அதன்மீது தன் தாயாரைக் கிடத்தி,

### வெண்பா

ஐயிரண்டு திங்களா வங்கமெலாநொந்துபெற்றுப்
பையலென்றபோதே பரிந்தெடுத்துச் - செய்யவிரு
கைப்புறத்திலேந்திக் கனகமுலைதந்தாளை
யெப்பிறப்பிற்காண்பேனினி 1

முந்தித்தவங்கிடந்து முந்நூறுநாட்சுமந்தே
யந்திபகலாச்சிவனை யாதரித்துத் - தொந்தி
சரியச்சுமந்துபெற்ற தாயார்தமக்கோ
வெரியத்தழன்மூட்டுவேன் . . 2

வட்டியிலுந்தொட்டியிலு மார்மேலுந்தோண்மேலுங்
கட்டிலிலும்வைத்தென்னைக்காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக்காப்பாற்றிச் சீராட்டுந்தாய்க்கோ
விறகிலிட்டுத்தீமூட்டுவேன் 3

நொந்துசுமந்துபெற்று நோவாமலேந்திமுலை
தந்துவளர்த்தெடுத்த தாழாமே - யந்திபகல்
கையிலேகொண்டென்னைக்காப்பாற்றுந்தாய்தனக்கோ
மெய்யிலேதீமூட்டுவேன் 4

அரிசியோநானிடுவேனாத்தாடனக்கு
வரிசையிட்டுப்பார்த்து மகிழாமல் - உருசியுள்ள
தேனேயமிர்தமே செல்வத்திரவியபு
மானேயெனவழைத்தவாய்க்கு 5

அள்ளியிடுவ தரிசியோ தாய்தலைமேற்
கொள்ளிதனைவைப்பேனோ கூசாமல் - மெள்ள
முகமேன் முகம்வைத்து முத்தாடியென்றன்
மகனேயெனவழைத்த வாய்க்கு 6

## விருத்தம்

முன்னையிட்டதீமுப்புரத்திலே
பின்னையிட்டதீதென்னிலங்கையி
லன்னையிட்டதீயடிவயிற்றிலே
யானுமிட்டதீமூள்கமூள்கவே

## வெண்பா

வேகுதேதீயதினில் வெந்துபொடிசாம்ப
லாகுதேபாவியேனையகோ - மாகக்
குருவிபறவாமற் கோதாட்டியென்னைக்
கருதிவளர்த்தெடுத்தகை

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ வென்னை மறந்தாளோ - சந்ததமு
முன்னையே நோக்கி யுகந்துவரங் கிடந்தென்
றன்னையே யின்றெடுத்த தாய் 9

வீற்றிருந்தா ளன்னை வீதிதனி லிருந்தாள்
நேற்றிருந்தா ளின்று வெந்து நீறானாள் - பாற்றெளிக்க
வெல்லீரும் வாருங்க ளேதென் றிரங்காமல்
எல்லாஞ் சிவமயமே யாம் 10

என்னும் பாசுரங்களைத் திருவாய் மலர்ந்து இவ்வுலகினர் போல் ஜடாக்கினியாற் சுடாமல் தனது ஞானாக்கினியாற்றகனஞ் செய்து பரமசிவப் பிரபுவினது திருவடி நிழலையடையும்படி தியானசமாதியால் அந்தியேஷ்டி முதலியகிரியையாவும் நிறைவேற்றி

வெண்பா.

மென்றுவிழுங்கி விடாய்கழிக்க நீர்தேட
லென்றுவிடியு மெனக்கெங்கோவே - நன்றி
கருதார் புரமூன்றுங் கட்டழலாற் செற்ற
மருதாவுன் சந்நிதிக்கே வந்து.

என்னுந் திருவெண்பாவைப்பாடி அங்கு நின்றும் புறப்பட்டு மேற்றிசைநோக்கிச்சென்று திருவிடைமருதூரைச் சமீபித்தனர்

## பட்டனத்தடிகள்

## திருவிடைமருதூரடைந்தது

திருவிடைமருதூரிலுள்ள சிவனடியார் யாவரும் அடிகள் வருவதைக் கேள்வியுற்று எதிர்சென்று பன்முறை பணிந்துநிற்க அடிகளும் அவ்வடியவர்களை வணங்கினர் பின்பு பட்டினத்தடிகள்

அவ்வடியவர்களுடன் நகரிற்சென்று திருவாலயத்தையடைந்து மருதப்பெருமானைத்தரிசித்து என்புநெக்குருகக் கைகுவித்து மெய்சிலிர்த்து கண்ணீர்ததும்ப ஆனந்தபரவசராய் நின்று "தெய்வத்தாமரைச் செவ்விதின்மலர்ந்து,, என்ற இணைக்குறளாசிரியப்பாமுதலாகவெடுத்துத் திருமும்மணிக்கோவைபாடி முடித்து அருள்விடைபெற்று வெளியில் வந்து பிச்சையேற்றுண்டு திருக்கோபுரவாயிலிலே சிவஞானசமாதி செய்திருந்தனர் பின்னோர்ஞான்றிரவில் திருவிடைமருதூர் மகாலிங்கப்பெருமான் அவ்வூர்க் காவலன்போற்றோன்றிப் பட்டினத்தடிகள்பாற் சென்று றம் கையிலிருக்குங் கோலால் நிலத்தைத் தாக்கித் தமது திருவடியாற் றீண்டி நீயாரென்று வினவ அடிகள் வந்தவரை நோக்கி ஊர்க்காவல! யானுவன்தோலோ, நாம்போ, தசையோ, உரோமமோ, எலும்போ உதிரமோ. மூச்சோமனமோ, யாதோவறிகிலேனென்றனர் உடனே பெருமான் மறைந்தருள, பட்டினத்தடிகள்வந்தவரிறைவரென வுணர்ந்து ஆறாமைமேற்கொண்டு அழுதுதொழுது தோத்தரித்து அவர் நின்ற நிலத்து அடிச்சுவட்டிணைக்கண் ஞெற்றிப்பொடிமுடிக்கணிந்து துதித்துநின்றனர். பின்பொருநாள் மருதீசர் பட்டினத்தடிகள் கனவிற்றோன்றிவெண்காட! நீ நமது திருப்பதிகடோறுஞ் சென்று பாடக்கடவாயென்று கட்டளையிட்டனர் அடிகள் விழித்தெழுந்து அன்பும் ஆறாமையுமுடையவராய்ப் பெருமான் கட்டளையைச் சிரமேற்கொண்டு கோ

யிலேவலம்வந்து மருதீசரைத் தரிசித்து அருள் விடைபெற்று அவணின்றும்புறப்பட்டுத் திருக் குடமூக்கு, கீழ்க்கோட்டம், காரோணம், நாகேச் சுரம்குரங்காடுதுறை, மயிலாடு துறை, முதலிய திருப்பதிகளைத் தரிசித்துத் திருவாரூரையடைந்து திருவீதிவலம் வந்து ஆலயத்திற் பிரவேசித்து வன்மீகநாதரையும் கமலாம்பிகை யம்மையையும் வீதிவிடங்கப் பெருமானையும் பலகாற்றரிசித்துப் பிச்சையேற்றுண்டிருந்தனர்

## திருவாரூரில் இறந்தவனை யெழுப்பியது

இப்படித் திருவாரூரிலிருக்குநாளில் ஒருசிறு வன் இப்பட்டினத்தடிகளிடத்துமிகுந்த அன்பும் பத்தியுமுடையவனாய்க் காலந்தவறாது உணவு முதலியவற்றாலுபசரித்து அல்லும்பகலும் பிரி யாது தொண்டுசெய்து வந்தனன். அச்சிறுவன் தன்தாய்க்கு ஒரேபுதல்வனாக விருந்தனன். அவன் றந்தையுடன் கூடப்பிறந்த நல்லத்தை யொருவள் ஒரே பெண்ணை யுடைத்தானவளாயும் வேறு சந் ததி யில்லாதவளாயு மிருந்தனள் இவள் தான்பெற்ற ஏகபுத்திரியைத் தன்தமயன் புதல்வனாகிய விச்சிறு வனுக்குத் திருமணஞ்செய் வித்துத் தமையன் குடியுந் தன்குடியு விளங்கும்படி செய்யவேண்டு மென்கிற கருத்தினளா யிச்சிறுவன்றாயிடம்சென்று தன்கருத்தை யறிவிக்க, அவளதனைத் தன்மகனுக் குத்தெரிவித்தனள், இச்சிறுவன் அவர்கள் கருத்து க்கிணங்காதவனா யிருந்தமையால் அவ்விருபெண் பாலரும் பட்டினத்தடிகளிடத்தில் தங்கள்கருத்தை

விண்ணப்பஞ்செய்து நின்றனர். அடிகள் இவ்விருவர் முறைப்பாட்டினுக்கிரங்கி இச்சிறுவனை நோக்கிஐய! நினதுதாய் அத்தை இவர்களின் கவலையை யொழிக்கக்கடவாய் இறைவன்றிருவருண்டாகுங்காலத்திலுண்டாகும். என் சொல்லை மறுக்காது நிகழ்த்தக் கடவாய் என்று கட்டளையிட்டனர். அதனைக் கேட்ட சிறுவன்பயந்து அடிகளை வணங்கி பெருமானே! தேவரீரது திருவடியைப் பிரியாது தொண்டுசெய்து கிடக்கக்கருதிய அடியேனுக்கு ஊழ்வினை யிங்கனமிருந்தது போலும், ஆயினும் அடியேன் மணம்புணருங்கால் தேவரீர் வந்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று பிரார்த்தித்து நிற்க, அடிகளும் அங்ஙனே யாகுகவென்று விடைகொடுத்தனுப்பினர் பிறகு அவனை அவன்தாயும் அத்தையுமழைத்துக்கொண்டுபோய் நல்ல சுபமுகூர்த்தத்தில் மணம்புரிவித்தனர் அம்மணப்பந்தலிலே அடிகள் சென்று அவன் கருதியவாறு ஆசீர்வதித்து அவனடை வதின்னதெனவவனுக்குணர்த்தவேண்டி,

"காப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியந்தேடி
நல்லறென் றுமறியாத நாரியரைக்கூடிப்
பூப்பிளக்கவெழுகின்ற புற்றீசல்போலப்
புலபுலெனக்கலகலெனப் புதல்வர்களைப்பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர் கைவிடவுமாட்டீர்
கவட்டுத்தொன்மரத்திடுக்கிற்காலுழைத்துக்கொண்டே
ஆப்பதனையசைத்துவிட்ட குரங்கதனைப்போல
அகப்பட்டீர் கிடந்துழலவகப்பட்டீர் நீரே
என்னும் திருச்செய்யுளைப்பாடிச் சேஷையிட்டுச்சென்றனர்

அப்பால் அந்த மணமகன் தன்மனைவியோடு கூடி வாழ்ந்திருக்கையில் ஓர் நாள் எண்ணெயிட்டு நீராடி யன்றிரவு தன்மனைவியோடுபுணர அதனால் ஜன்னிபாதங்கண்டு இறந்தனன் உடனே அவனதுமனைவி, மாமி, தாய், சுற்றத்தினர் முதலிய யாவருங்கூடி யாருக்குஞ் சகியாத பேரிரைச்சலிட்டு அழுதார்கள் அப்பொழுது திருவருளாணையின் படியவ்வூரிலுலாவும் பட்டிணத்தடிகள் அவ்வீதியில் வரலும் வீதியிலுள்ளார்கண்டு ஓடிவந்து அடிகளைவணங்கி ஐய! தேவரீருக்குத்திருத்தொண்டு செய்துகொண்டிருந்த சிறுவன் ஜன்னிபாதத்தால் இன்று இறந்தனன் என்றுகூற, அடிகள் கேட்டு இரக்கமுற்று இறந்துகிடக்கும் சிறுவனருகிற் சென்று பிணமகனைத் திருக்கருணையால்நோக்கி.

விருத்தம்

வடிவந்தானும்வாலிபம்மகளுந்தாயுமாமியும்
படிகொண்டாருமூரிலேயழிகொண்டாடனீதியோ
குடிவந்தானுமேமைழயோடுயவன்றூனுங்கூழையோ
நடுநின்றூனும்வீணமேனுநகரஞ்சூறையானதே.

என்ற செய்யுளைப் பாடித்தன்னை யடிமை கொண்ட ஆளுடையான் றிருவருளை நோக்கி

விருத்தம்

மண்ணுமுருகு மாமுருகு மாயையுருகு மாலுருகும்
பெண்ணுமுருகு மாணுருகும்பேதாபே தவகையுருகும்
அண்ணலுருகு மிடத்தமர்ந்தவாத்தாளுருகு மரவணையான்
எண்ணியுருகுங்குருநாதனென்பாலுரைத்தவோர்மொழியே

என்ற திருபாசுரத்தைத் திருவாய்மலர்ந்தனர் அப்பொழுது இறந்துகிடந்தபிணமகன் உயிர்த்து நித்திரைசெய்து விழித்தவன்போல எழுந்து தொழுதுநின்றனன் அங்கிருந்தயாவரும் ஆனந்தக்கடலில் மூழ்கினர் அவ்விடலே நடந்த செய்தி யொன்றுமறியாதவனுதலால் பட்டினத்தடிகள் அமுது செய்யக் காலதாமதமாயிற்றே யெனவருந்தித் திருவமுது தயார்செய்ய முயன்றனர் அதைக்கண்ட அடிகள்

வெண்பா

எருவாய்க்கிருவிரன்மேலேறுபுழுக்கூட்டுக்
கருவாய்க்கேகண்கலக்கப்பட்டாய் - திருவாரூர்த்
தேரோடும்வீதியிலேசெத்துக்கிடந்தாயே
நீரோடுந்தாரைக்கேநீ

என்னும் பாசுரத்தைப்பாடி அக்காளைக்கு நல்லருள்செய்து வாழ்த்தி அவனையங்கிருத்தி அப்பாலேகினர் அப்பொழுது அவ்வூரிலுள்ளார் வந்து அடிகளை வணங்கிச்சுவாமி! அடியேங்களுய்யும்படி யாங்கள் புரியுந்திருத்தொண்டினை யேற்று இந்நகரிற்றனே வீற்றிருந்தருள் வேண்டுமென்று பிரார்த்தித்தனர் அடிகள் அவர்கள் குறிப்பை யுணர்ந்து

வெண்பா.

வெட்டவெளியானவெளிக்குத்தெரியாது
கட்டளையுங்கைப்பணமுங்காணாதே - இட்டமுடன்
பற்றென்றுற்பற்றுதுபாவியேனெஞ்சிலவன்
இற்றெனவே வைத்தவினிப்பு

என்னும் பாடலைப்பாடி அவர்களை நிறுத்தி விட்டுத்திருவை யாற்றுக்குச்சென்று பெருமானைத் தரிசித்து

மண்ணுந்தணலா றவாணும்புகையா ற
வெண்ணரியதாயுமிளேப்பா றப் - பண்ணுமயன்
கையா றவுமடியேன்காலா றவுங்கண்பா
ரையாதிருவையா ரூ.

என்றபாடலைப்பாடி அங்குநின்றுபுறப்பட்டுத் தெற்குநோக்கிச் சென்று ஆங்காங்குள்ள பலதிருப்பதிகளையுந் தரிசித்துப் பாண்டிநாடடைந்து அங்குள்ளதிருவாலவாயென்னு மதுரையையடைந்து சொக்க லிங்கப் பெருமானையும் அங்கயற்கண்ணி யம்மையாரையுந் தரிசித்து

கட்டளைக் கலித்துறை

விடப்படுமோ விப்பிரபஞ்சவாழ்க்கையை விட்டுமனந்
திடப்படுமோ நின்னருளின்றியே நினைமேயலையக்
கடப்படுமோ வற்பர்வாயிலிற்சென்று கண்ணீர்ததும்பிப்
படப்படுமோ சொக்கநாதாசவுந்தரபாண்டியனே.

என்றது முதலியதிருப் பாடல்களைப்பாடி அங்குச்சின்னாள் வீற்றிருந்து அங்குநின்றும் புறப்பட்டுஅந்நாட்டிலுள்ளமற்றுந் திருப்பதிகளை யெல்லாந் தரிசித்துக் கொங்குநாடடைந்தனர்.

பின்பு பட்டினத்தடிகள் அந்நாட்டிலுள்ள பேரையூர், அவிநாசி, முருகன்பூண்டி முதலிய திருப்பதிகளையடைந்து சிவபெருமானைத்தரிசித்து மவுனமாயவ்வவிநாசியில்வீற்றிருக்கையில் ஓர்நாளி

ரவில் பசித்தீயெழுந்து வருத்த ஓர்மூர்க்கன்வீட்டுத் தலைவாயிலிற்சென்று பிச்சையிட வேண்டுமென்ப தையவனுக்குணர்த்தும்படி தனதுகையைத் தட்டி னர் அம்மூர்க்கன் இவரைக் கள்வனென்றெண் ணித் தடி கொண்டடித்து வருத்த, அடிகள் நின்ற நிலை பெயராது சிவசிவ சிவசிவமென்றுநிற்க அதற் கடுத்த வீட்டுத்திண்ணையிலிருந்த மற்றொருகுடும்பி ஓடிவந்து அம்மூர்க்கனை விலக்கி அடிகளைத் தன் வீட்டுக்கழைத்துப்போய் அமுது படைத்துப்பசி யாற்றி யுபசரித்தனன் அப்பொழுது பட்டினத்தடி கள் திருவருளை நினைந்து,

கட்டளைக் கலித்துறை

பூணும்பணிக்கல்லபொன்னுக்குத்தானல்லபூமிதன்னைக்
காணும்படிக்கல்லமங்கையர்க்கல்லநற்காட்சிக்கல்ல
சேணுங்கடந்தசிவனடிக்கல்லவென்சிந்தைகெட்டுச்
சாணும்வளர்க்கவடியேன்படுந்துயர்சற்றல்லவே

வெண்பா

இருக்குமிடந்தேடியென்பசிக்கேயன்ன
முருக்கமுடன்கொண்டுவந்தாலுண்பேன்-பெருக்க
வழைத்தாலும்போகேனரனேயென்றேக
மிளைத்தாலும்போகேனினி

என்ற திருச்செய்யுள்களைப்பாடி அங்குச் சின்னாளி ருந்து புறப்பட்டுத் துளுவநாடடைந்து கோகர்ன முதலிய தலங்களைத் தரிசித்து அப்பாலேகி உஞ் சேனைமாகாளம் என்னும் நகரையடைந்து மாகா ளேசுரரைத் தரிசித்து அந்நகரை யடுத்த காட்டி

லுள்ள விநாயகர்கோயிலின் ஓர் மூலையிற் சென்று பரஞான நிஷ்டையில் வீற்றிருந்தருளினர்.

கழுமரம்பற்றியெரிந்தது

இங்ஙனமிருக்க ஓர்ஞான்றிரவில் சில கள்வர்கள்கூடி அந்நகரையாளும் பத்திரகிரி மகாராஜனரண்மனையில் களவு செய்யக்கருதிப் புறப்பட்டுப் பட்டினத்தடிகள் வீற்றிருக்குங் கோயிலண்டை வந்து அதிலெழுந்தருளியிருக்கும் விநாயகப்பெருமானை வணங்கித் தங்கட்குக் களவுசெய்ய வாய்க்க வேண்டுமெனப் பிரார்த்தித்துச்சென்று அரண்மனை வாயிலடைந்து காவலர்களயர்ந்திருக்குந்தருணம் பார்த்து உட்புகுந்து தங்கட்கு வேண்டியமட்டும் நிதிக்குவியல்களை வாரிச்சென்றனர் இங்ஙனஞ்செல்லுகையில் தங்கள் பிரார்த்தனைப்படி களவுசெய்யக்கிட்டியதற்கு மகிழ்ந்து அதில் விலையுயர்ந்த பதக்கமொன்றினையெடுத்து விநாயகப் பெருமான் றிருக்கழுத்தில் விழும்படி போட்டுவிட்டுப் போயினர் இருட்டுக்காலமானதால் அந்தப்பதக்கம் விநாயகப்பெருமான் றிருக்கழுத்தில் விழாமல் அவர்பக்கத்தில் சிவஞானநிட்டை கூடியிருந்த பட்டினத்தடிகள் கண்டத்தில் விழுந்தது இது நிற்க பத்திரகிரிமகாராஜனரண்மனையிற்களவுபோனதைப்பற்றி காவலாளர்கள் புறப்பட்டு எங்கணுந் தேடிக்காணாதுபொழுதுவிடிந்தவுடனே புதியகாற்சுவடுகள் தோன்ற அவ்வழியேபோய் விநாயகராலயத்தினையடைந்து பட்டினத்தடிகள் பதக்கத்துடனிருக்கக் கண்டு அவரைக் கள்வனென்றெண்ணி இழுத்த

லைத்துப்பலவாறு துன்பப்படுத்தினர் அப்பொழுது அடிகள் சிவஞாநநிட்டையினின்றுங்கண்விழித்து நிகழ்ந்ததொன்றுந் தெரியாராதலின்காவலாளர்கள் தன்னையடித்துத் துன்புறுத்துவதைத் தடுக்காது திருவருளைக்கருதி சிவசிவ சிவசிவவென்றுநின்றனர் அக்காவலர்களிற்சிலர் இவன் பெரிய மாயக் கள்வனென்றனர் சிலர் இவன் குடி மயக்கமுற்று மற்றையரைப்பிரிந்து தனித்தனன்போலுமென்றனர் சிலர் இங்ஙனம் ஜாலஞ்செய்தாற்றன்னைவிட்டு விடுவார்களென்றெண்ணி யிங்ஙனம் வாய்பேசாதிருக்கின்றனவென்றனர் சிலர் அடே திருடாிற்றலைவ நின்னுடன் வந்து திருடியவர்களெங்கேயொளித்திருக்கின்றனர் திருடிய நிதியனைத்துமெங்குமறைத்து வைத்திருக்கிறீர்கள் உடனே சொல்லென்று பின்னுந்துன்புறுத்தினர் அப்பொழுதும் பட்டினத்தடிகள்சிவசிவவென்றேநின்றனர் அதைக்கண்ட அக்காவலர்களிற் சிலர் அடிகளது செய்கையை நோக்கி இவர் சிவயோகத்திற் சிறந்த பெரியவர் போலிருக்கின்றது இவ்வளவு தூரம்துன்பப்படுத்தியும் சற்றேனும் முகக்களிப்பின்றிச் சிவத்தோத்திரஞ் செய்து நிற்கின்றனர்இதனுண்மையறியாது இவரை வருத்துவோமானல் என்னென்னதீங்கு விளையுமோ! ஆனதால் நடந்தவைகளை யரசனுக்கறிவித்து அவர்கட்டளைப்படிநடத்துவோமென்று சொல்லி அடிகளை வருத்தாது விடுத்தனர்.

இங்ஙனமிருக்க அடிகளை விநாயகராலயத்திற்கண்டவுடனே சிலமூர்க்கக்காவலாளர்களோடி

அரசனைக்கண்டு மகாராஜ! நமது பொக்கிஷசாலை யில் நேற்றிரவுகொள்ளையடித்ததிருடர்களிலொரு வன் இப்பட்டினத்தையடுத்த அடவியிலுள்ள வி நாயகராலயத்திலிருந்தகப்பட்டனன் அவன்வாய் பேசாது மவுனமாயிருப்பவன்போல் ஜாலஞ்செய் கின்றான் ஆனதால் அவனைக் கழுவிலேற்றினு லொழிய மற்றைத்திருடர்கள்கிடைக்கார்கள் அல் லாமலும் இன்னும் நமது அரண்மனையிலுள்ள நிதியனைத்துந் திருடிக்கொண்டுபோய்விடுவார்கள் ஆனதாலுடனே கழுவேற்ற உத்தரவளிக்கவேண் டுமென்றெனர் அரசன் அதைக்கேட்டு ஒன்றுந் தோன்றமல் மனக்கலக்கமாயிருந்தனன் அம்மூர்க் கக்காவலர்கள் பின்னும் அரசனை நோக்கி ஐய! நா ங்கள் பழிக்கிடமாகும்படி வேற்றாளைப்பிடித்துவந் தோமில்லை அவனிடத்திற்களவுபோனநகைகளிற் பதக்கமொன்றிருக்கிறது ஆனதாற்றங்கள் யோச னைசெய்யவேண்டியதில்லை அவனை இப்போழுதே சிட்சிக்க உத்தரவளிக்கவேண்டுமென்றுசொல்லபத் திரகிரி மகாராஜன் திரோதானசத்திவசத்தினுய்க் கழுவேற்றக்கட்டளையிட்டனன் உடனே காவல்மா க்களோடி அடவியிலுள்ள விநாயகராலயத்திற்குச் சமீபத்திலிருக்கும் பட்டினத்தடிகளைத்தளையிட்டுக் கழுமரத்தண்டை யழைத்துவந்துநிறுத்தினர்முன் அடிகளைத் துன்பப்படுத்தாதபடிக்குத் தடுத்த சில காவலர்கட்கு மாத்திரங் கழுவிலேற்ற மனமொவ் வாதிருந்தும் அரசன்கட்டளைக்குப்பயந்தே வாளா விருந்தனர் இங்ஙனம் பட்டினத்தடிகளைக்கழுவி

லேற்ற வெத்தனிக்கையில் அடிகள் கழுமரத்தைப் பார்த்துக் காலகாலனைக்கருதிப்புன்முறுவல்செய்து

"என்செயலாவதியாதொன்றுமில்லையினித்தெய்வமே
உன்செயலேயென்றுணரப்பெற்றேனிந்தவூனெடுத்த
பின்செய்ததீவினையாதொன்றுமில்லைபிறப்பதற்கு
முன்செய்ததீவினையோவிங்ஙனேவந்துமூண்டதுவே"

என்ற பாசுரத்தைத் திருவாய்மலர்ந்தருளினர் உடனே அடிகள் காலில் பூட்டப்பட்டிருந்த தளை துண்டுதுண்டாய்த்தெறித்து விழுந்ததன்றியும் கழுமரமுந்தீப்பற்றி யெரிந்தது அதனைக்கண்ட காவலாளர்கள் பயந்தோடி நடந்தவைகளை யரசனுக்குத் தெரிவிக்க அரசன் திடுக்கிட்டோடி வந்து பற்றி யெரியுங் கழுமரத்தையு மதனருகில் நிற்கு மடிகளை யுங்கண்டு என்புநெக்குருகி உரோமஞ்சிலிர்த்துக் கடன் மடைதிறந்தெனக் கண்ணீர்பொழியத் தன்னைமறந்து நின்றனன்,

பத்திரகிரியார் திருவருள்பெற்றது.

அங்ஙனம் நின்றபத்திரகிரிமகாராஜாவானவர் சற்றுத்தெளிந்து சுவாமிகளைப் பன்முறைபணிந்தெழுந்து நின்று எம்மையனே! அடியேனறியாதியற்றிய குற்றத்தாற்றமது திருமேனிமிக்க வருந்தியது போலும் தீரவிசாரியாமலித்தீங்கினையிழைத்த பாவியான்! என்செய்கேன்! என்செய்கேன்!! என்று வருந்த பட்டினத்தடிகள் கருணைகூர்ந்து கடைக்கணித்துத் தத்துவநியதிசெய்து

நாய்க்கொருசூலுமதற்கோர்மருத்துவநாட்டிலுண்டோ
பேய்க்கொருஞானம்பிடிபடுமோபெருங்காஞ்சிரங்கா
யார்க்குவராதருந்தாவராதுபோலுடம்பு
தீக்கிரையாவதல்லாலேதுக்காமினைச்செப்புமினே.

"மானார்விழியைக்கடந்தேறிவந்தனன்வாழ்குருவுங்
கோனாகியென்னைக்குடியேற்றிக்கொண்டனன் குற்றமில்லை
போனாலும்பேறிருந்தாலுநற்பேறிதுபொய்யன்றுகா
ணானாலுமிந்தவுடம்போடிருப்பதருவருப்பே."

என்ற திருப்பாசுரங்களைத் திருவாய்மலர்ந் தருளி பத்திரகிரியாருக்குமனவுறுதியுண்டாகும்படி

அஞ்சக்கரமென்னுங்கோடாலிகொண்டிந்தவைம்புலனும்
வஞ்சப்புலக்கட்டைவேரறவாட்டிவளங்கள்செய்து
விஞ்சத்திருத்திச்சதாசிவமென்கின்றவித்தையிட்டுப்
புஞ்சக்களைபறித்தேன் வளர்த்தேன்சிவயோகத்தையே.

என்ற திருப்பாடலை யருளிச்செய்தனர். அதனைக்கேட்ட அரசரேறாகிய பத்திரகிரியார் திடச் சித்தராயாங்கு நின்றபடியே கிரீடாதிபூஷணங்களெல்லாவற்றையுங் களைந்தெறிந்து ஏகவஸ்திரதாரியாய்த் தன்னாடு முதலியவற்றைத் திரும்பிப் பாராது, கண்ணீருங்கம்பலையுமாய் அடிகள்பாதத் தில் வீழ்ந்து பெருமானே! அடியேனுய்யும்படி திருக்கடைக் கணித்தல்வேண்டுமென்று பிரார்த் திக்க, அடிகள்

ஓங்காரமாய்நின் றவத்துவிலே யொருவித்துவந்து
பாங்காய்முளைத்தபயனறிந் தாற்பதினாலுலகு
நீங்காமனிங்கிறையா நிறைந்துநிறையுருவா
யாங்காரமானவர்க்கெட்டாக் கனிவந்தமர்ந்திடுமே.

என்ற பாடலைப்பாடிப் பாவனாதீக்ஷைசெய்து சிவயோகவனுபவமுறைமையையனுக்கிரகித்தனர்

பட்டினத்தடிகள்
மறுபடியும் திருவிடைமருதூரடைந்தது,

பின்பு பட்டினத்தடிகள் பத்திரகிரியாரைத் திருவிடைமருதூருக்குப் போகும்படி கட்டளையிட்டனுப்பிவிட்டு அங்குநின்று புறப்பட்டுக் காசி முதலிய வடநாட்டுத்திருப்பதிகளுக்குச் சென்று ஆங்காங்கெழுந் தருளியிருக்கும் பெருமானைத்தரிசித்து அங்கிருந்து மேற்குச்சமுத்திர வோரமாய்ச் சென்று பாண்டிநாடடைந்து திருக்குற்றாலம் போய்க்குற்றாலநாதரைத் தரிசித்துத் தனது நெஞ்சினை முன்னிலையாக்கி,

காலன்வருமுன்னே கண்பஞ்சடைமுன்னே
பாலுண்கடைவாய்ப்படுமுன்னே—மேல்விழுந்தே
யுற்றாரழுமுன்னேயூரார் சுடுமுன்னே
குற்றாலத்தானையே கூறு

என்ற பாடலைப்பாடி அங்கிருந்து புறப்பட்டு இராமேச்சுரம் வேதாரணிய முதலிய தலங்களைத் தரிசித்து மறுபடியுந்திரு விடைமருதூர் புகுந்து மருதப்பெருந்தகையாரைத் தரிசித்துக் கீழைக்கோபுரவாயிலிலே வீற்றிருந்தனர்.

## பத்திரகிரியார்பின்சரித்திரம்

இது நிற்க, பத்திரகிரியார் குருவாஞ்ஞையின்படி உஞ்சேனைமாகாளம் விட்டுப்புறப் பட்டுதலங்க டோறுஞ்சென்றுபெருமானைத்தரிசித்துத்திருவிடை மருதூரணிகி பட்டினத்தடிகளைக்கண்டு பணிந்து அவர் கட்டளைப்படி நாடோறும் பிக்ஷையெடுத்து வந்து குருவாராதனைசெய்து சேடப் பிரசாதத் தினைத் தாம்புசித்து மேலைக்கோபுர வாயிலிலே சிவ யோகசாதனையிலிருந்தனர். இப்படிச் சிலகாலம் நடந்துவருகையி லொருநாள் பத்திரகிரியார் தமது குருநாதனது சேடப்பிரசாதத்தினைப் புசிக்கும்பொ ழுது ஓர் பெட்டை நாய்க்குட்டிவந்து வால் குழைத்து எளியமுகங்காட்டி நின்றது, பத்திரகிரி யார் சீவகாருண்ணிய மிகுந்தவராதலால் தானுண் ணுஞ் சேடப்பிரசாதத்திற்சிறிது அஃதிற்கிட்டனர் அந்நாய்க்குட்டி யதனையுண்டு அதுமுதல் அவரை நீங்காதிருக்க, பத்திரகிரியார் பின்னுந் தினந்தோ றும் சேடப்பிரசாதத்திற் சிறிதளித்துவந்தனர்

இங்ஙனம் சின்னாட்சென்றபின் ஓர் ஞான்று மருதவாணப் பெருந்தகையார் ஓர்சித்தர்வேடம்பூ ண்டு வெண்காடரிடஞ்சென்று ஐய! பசியால் மிக்க வருந்துகின்றனன் பிக்ஷையிட வல்லீரோவென, வெண்காடர் புன்னகைசெய்து ஐயரே! கோவணத் தினையேபாரமாக கொண்டிருக்கின்றயாஞ்ஞேபிக்ஷை யிடவல்லன், மேலைக் கோபுர வாயிலிலோர் குடும்பி யுளன் அவண் செல்வீரேல் நுமது பசி தணிவிப்ப னென்று சொன்னார் அதனைக் கேட்ட மருதவாண

வள்ளல் மேலைக்கோபுர வாயிலிருக்கும் பத்திரகிரியாரிடத்திற் சென்று பட்டினத்தடிகள் சொல்லியதைத் தெரிவித்துப்பிக்ஷைகேட்கபத்திரகிரியார்மனநடுங்கித்தமது குரவர்சொல்லின் குறிப்பறிந்துஇவ்வோடும் நாயுமோவென்னைச் சமுசாரி யாக்கியது குருநாதன் றிருவுள மப்படியாயின் இவைதா னெற்றிக்கு என்று பக்கலிலிருந்த ஓட்டினைச் சுழற்றியெறிந்தனர் அவ்வோடு அருகிலிருந்த முடுவலின் சிரத்திற்ருக்கி யுடைந்து போனதன்றியும் அந்நாயுமிறந்து போயிற்று பலியேற்க வந்தசித்தரும் மறைந்து விட்டனர்பின்புபத்திரகிரியார்திருவருட் செயலைநாடி.

ஆங்காரமுமடக்கி யைம்புலனைச்சுட்டறுத்துத்
தூங்காமற்றூங்கிச் சுகம்பெறுவதெக்காலம்

என்றது முதலாகிய திருப்புலம்பல் பாடி முடித்துச்சிவயோக சாதனை செய்திருந்தனர்

இறந்த நாயின் பூர்வசரித்திர மென்னையோவெனில் அங்கதேசத்திலே தனதழகென்னுங் கயிற்றினால் இளைஞர்களென்னுங் குடங்களைக்கட்டியவர்கள் மனையிலுள்ளபொக்கிஷச்சாலையென்னுங் கிணற்றிலே விடுத்து பொருளென்னும் ஜலம் வற்றும்படி மொண்டு மொண்டு ஓட்டாண்டியாக்கும் வஞ்சகக் களஞ்சியமென்னும் பரத்தையர் குலத்திலே பிறந்த மிக்க ரூபவதியாகிய வோர் தாசியிருந்தனள் அவள் மூத்தோ ரிளையோரென்ற வரம்பின்றியும் தமயன், தம்பி, தகப்பன், குமாரனென்றமுறை கடந்துங் கலவி செய்து புலால்லுண்ணல்,

கள்ளருந்தல், பிறர் பொருளை யேமாற்றி யபகரித்தல் முதலிய மாபாதகத் தொழில் புரிவதிலேயே தன் வாழ்நாள் முழுதுங் கழித்து வந்தனள் ஒரு சிவயோகியார் பசியால் மெலிவுற் றவளில்லத்தில் கண்ணடைந்து யாசிக்க அவள் தன் விடநாயகனுந் தானும் புசித்து மிகுந்த வுணவைப் பரிகாசமா யச்சிவ ஞானியின் கரத்திற் கொடுத்தனள். அவர் அதனைவாங்கிக் குருபிரீதி செய்து புசித்துப் பசியாறிப் போயினர் பின்பு அந்தவிலைமாது முதுமைப் பருவமடைந்து இறந்தனள் அவள் செய்து வந்த மாபாதகத் தொழிலாலும் சிவஞானிகரத்திற் பரிகாசமா யுச்சிட்டதைக் கொடுத்த தோடத்தாலும் மறுபிறப்பி லிந்நாயாய்ப் பிறந்தனளாலும் அச்சிவ ஞானி யதனையுண்டு பசியாறிய விசேடத்தாலும் மகாசிவஞானியாகிய பட்டினத்துப்பெருந்தகையாரது சேடப் பிரசாதத்தினையும் பத்திரகிரியாரது சேடப் பிரசாதத்தினையு முண்ணும்படியாகிய பெரும் பாக்கியம் பெற்றது அதனையுண்ட விசேடத்தாலும் அதிதீவிர பக்குவியாகிய பத்திரகிரியாரது திருக்கரத்தா லிறந்த விசேடத்தாலும் அந்நாயானது முற்பிறப்புகளிற் செய்த பாவங்களெல்லாந் தீயினிற் பஞ்சுபோலொழிந்துபுண்ணியமுதிர்ச்சியாய்க் காசி நாட்டை யரசாண்ட விசுவகுத்த மகாராஜனுக்கு புதல்வியாய் பிறந்து பூர்வ ஞானத்தோடிருந்தது.

அவ்வரச னப்பெண்ணுக்கு "ஞானவல்லி" என்ற பெயரிட்டு மிக்கவன்போடு வளர்த்து வந்தனன் அப்பெண்ஒப்புவுயர்வற்ற அழகுடையளாய்த்

தேவதாபக்தியோடு வளர்ந்து பெதும்பைப்பருவ மடைந்து, தன் தந்தைதன்னையொருகணவனுக்கு மணஞ்செய்து கொடுக்கக் கருதியதையறிந்து தந்தைபாற் சென்று அப்பா! நான் யாரையுமணம்புரிய விசையேன் எனது குருமூர்த்தி தென்தேசத்திலுள்ள திருவிடைமருதூர் மேலைக்கோபுரவாயிலில் வீற்றிருக்கின்றனர். இப்பொழுதேயவரிடத்திலென்னைக்கொண்டுபோ யொப்பிவிக்கவேணுமென்று வேண்டிக்கொண்டனள் அதனைக்கேட்ட விசுவகுத்தமகாராஜன் திடுக்கிட்டு நமதரண்மனை முற்றிலுங்கூடப் பார்த்தறியாத விக்குழந்தை தனக்குக் குருநாதரொருவருளரென்றும் அவர் தென்தேயத்துத் திருவிடைமருதூரிலிருப்பதாயுஞ் சொல்லுகிறது; மிக்க வியப்பாயிருக்கின்றது ஆனாலிப் பெண்ணினிலக்கணங்களைப் பார்த்தால் இவ்வுலகத்துப் பெண்கள் போலிருக்கவில்லை தேவாம்சமாயிருக்க வேண்டும் இல்லையே லிவ்விளம் பருவத்திலிவ்வளவு முதிர்ந்த குருபக்தி வரமாட்டாது ஆனதா லிப்பெண்ணின் கருத்தின்படியே செய்வது உத்தமமெனத் தீர்மானித்து நன்னாட் பார்த்துத் தன்மகளைச்சிவிக்கையிலேற்றிக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டுப் பரிவாரங்களோடு திருவிடைமருதூர் மேலைக்கோபுரவாயில் வந்தடைந்தனர் உடனே அப்பெண் சிவிக்கையினின்றிறங்கி சில நாட்கன்றைப்பிரிந்திருந்த விளம்பசுவைப்போற் பேரவாவோடு இருகரங்குவித்துப் பத்திரகிரியாரருகிற் சென்று அவர் சிவயோக சமாதியிலிருப்பதை

யறிந்து விழிக்குங்காலம் பார்த்திருந்து விழித்தவு டன் அவர் திருமுன்னின்று எம்பெருமானே நாய டியேன் மறுபடியுந் தேவரீரது திருவடிப்போற்றி னேயே கருதிவந்தனனென்று வணங்கினள் பத்திர கிரியார் அப்பெண்ணின் பூர்வோத்திரமெல்லாந் திருவருளாலுணர்ந்து அப்பெண்ணின் கரத்தைப் பற்றிக் கீழைக்கோபுர வாயிலிற்சென்று தனது ஞானசிரியராகிய பட்டிணத்தடிகள் சந்நிதியில் விட்டு எம்மையனே! தேவரீரது சேடப்பிரசாதத் தினையுண்ட நாய்க்குமிப்பிறவி நோய் வரலாமோ வென்று மிக்கவருந்தி நிற்கபட்டினத்தடிகள்சிவன் செயலுக்கென்செயவல்லோமென்றுசொல்லித் திரு வருளை நாடினர். அப்பொழுது "ஓ வெண்காட! நீ நமது ஒற்றியூருக்கு வருதி" என்றோரசரீரி வாக்குப்பிறந்து உடனே அங்கோர் சோதியுண் டாயிற்று சிவபெருமான் கட்டளைப்படி பத்திரகிரி யாரும் நாயடியாளாகிய பெண்ணுமச்சோதியிற் கல ந்து இரண்டறக்கலத்தலாகிய சுத்தாத்துவித முத்தி யடைந்தனர் உடனே அச்சோதிசென்று மருத வாண மகாலிங்கத்தில் மறைந்தது உலகமெங்கும் புஷ்பமாரி பொழிய சிவனடியார் யாவரும் ஹரஹர வென்று துதித்து ஆனந்தபரவச ராஞர்கள் விசு வகுத்தமகாராஜனுந் தரிசித்துப் பேரானந்தமுற்று அங்கிருந்து புறப்பட்டுச் சென்று தன்னகர மடை ந்தனன். அப்பொழுது பட்டினத்தடிகள் திடுக் குற்றுக் கண்களிலானந்தநீர்பெருக மருதவாணர் சந்நிதியைநோக்கி, முன்னாளில்வரகுணபாண்டிய

ரது மனைவியைத் திருவடியிற் கலந்து கொண்ட கிருபாசமுத்திரமாகிய எம்பெருமானே! என்னையு மென்வினையையும் இன்னும்வைத்திருப்பதெற்றிக்கோ வென்றுவருந்தி, பெருமான் முன்கட்டளையிட்டபடி திருவொற்றியூரடையக்கருதி மருதூராலயத்தை வலம்வந்து அருள்விடைபெற்று அங்கிருந்து புறப்பட்டு வடக்கு நோக்கிச் சென்றனர்.

## வரகுணபாண்டியன் சரித்திரம்

அடிகள்கூறிய வரகுணபாண்டியரது சரித்திர மென்னையோவெனில், முற்காலத்தில் பாண்டியர் குலத்திலவ தரித்தவரகுண தேவரென்பவர் மதுரைமாநகரை மநுமுறைதவறாதரசாண்டு வந்தனர். அவர் ஒருநாள் தேரேறி வீதியிற்செல்லுகையில் வயோதிகப்பிராமணனொருவன் றேர்க்காலிலகப்பட்டிறந்தனன். அப்பிரமஹத்தி யவ்வேந்தர் சிகாமணியைப்பற்றிச் சின்னாள்வருத்தி வந்தது. அவ்வேந்தன் வேதாகமங்களிற் கூறியபடி யதற்குப்பரிகாரஞ் செய்தும் நீங்காதுவருத்த தனது குலதெய்வமாகிய சொக்கேசர் சந்நிதியிற்சென்று பணிந்து பிராமணன்சாயைப் பிரமஹத்தியாய்ப் பிடிக்கின்றதே என்செய்கேனென்செய்கேனென்று குறையிரந்தனர். அப்பொழுது காருண்யமேசொரூபமாகவுடைய திருவாலவாயுடையாரின் றிருவருளால் "வரகுண! திருவிடைமருதூருக்கு வந்து எம்மைத்தரிசித்தாலிஃது நீங்கு மென்றோரசரீரியுண்டாயிற்று. உடனே வேந்தர் சிகாமணியாகிய வரகுணபாண்டியர் அங்கிருந்து புறப்பட்டுசிவாஞ்

ஞையின்படி திருவிடைமருதூரடைந்து அங்குள்ள காருண்யாமிருத தீர்த்தத்தில் மூழ்கி திருவீதி வலம் வந்து கீழைக்கோபுரவாயில் வழியாய்க் கோயிலி னுட் புகுந்தனர். அப்பொழுது அவரைப்பற்றிய பிரம்மஹத்தி கோயிலினுள்வர அஞ்சி யக்கோபுர வாயிலிலேயே நின்று விட்டது.* பின்பு வரகுண பாண்டியர் மருதவாணரை வலம்வந்து தரிசித்து என்புநெக்குருக உரோமஞ்சிலிர்ப்பக்கடன் மடை திறந்தனைய கண்ணீர்பொழிய நாத்தழுதழும்பத்து தித்து அருள் விடை பெற்றுத் தமது விடுதிக் கேகத் திரும்பினர். இவர் அங்ஙனந் திரும்புகை யில் "வரகுண கீழைக்கோபுரவாயிலில் பிரம்ம ஹத்தி நிற்றலான்மேலைக் கோபுரவாயிலாற் செல்க" என்றோரசரீயுண்டாக அங்ஙனமே சென்று அந் நகரிலேயே வசித்து நாடோறு மருதப்பெருமானைத் தரிசித்துப் பெரும்பாரம் நீங்கப்பெற்றவன் போற் சுகமுற்றிருந்தனர். இங்ஙனமாக வரகுணபாண்டி யர் அந்நகரிலேயே வசிக்குங்கால் ஓர் நாளிரவிற் கள்வனொருவன் இவரரண்மனையிற் புகுந்து நிதி களை வெளவிச் செல்கையில் காவலாளர்கள் கண்டு அக்கள்வனைப்பிடித்துக்கட்டி இவர்முன் கொண்டு வந்துவிட இவர் அக்கள்வன்றேகத்திற் றிரு நீறணிந்திருக்கக் கண்டு அவன் அவன் சிவனடி யாரென்று மதித்து கட்டவிழ்ப்பித்து வணங்கி அவன் வேண்டுந் திரவியங்களைக் கொடுத்தனுப் பினர்.

* இப் பிரம்மஹத்தியின்சிலாரூபத்தைத் திருவிடைமருதூர் கீழைக் கோபுரவாயிலி லின்றுங் காணலாம்.

பிற்றைய நாளிரவில் அந்நகர்ப்புறத்தில் நரிகள் ஊளையிடுவதைக்கேட்டு பனியாலுங் குளிராலும் வருந்துவதால் சம்போ சம்போ வென்றுபெருமானை நினைத்தழுகிறது போலு மென்றெண்ணி அந்நரிகட்கெல்லாம் உடனே பீதாம்பரத்திறற் போர்வை தைத்துப் பூட்டச் செய்தனர். மற்றொரு நாளிரவில் நீரிலுள்ள தவளைகள் கத்துவதைக் கேட்டு அரகரவென்று பெருமானைத் தோத்திரிப்பதா யெண்ணியவைகட்கு மணிகளையும் பொன்களையுங் கலந்திறைக்கச் செய்தனர், மற்றொருநாள் சிவபெருமானது திருவபிடேகத்தினுக்காக எண்ணெயெடுக்க வாலயத்தி லுலர்த்தி யிருந்த எள்ளைத் தின்றவொருவனைக் கோவில் மெய்க்காவலர்கள் பிடித்து வந்து இவ்வேந்தர் முன்விட, அவன் ஒருவனுடைய எள்ளைத்தின்றால் அடுத்தபிறப்பில் மாடாய்ப் பிறந்து உழைக்கவேண்டுமென்று பெரியோர் சொல்லக் கேட்டிருப்பதால் இவ் வெள்ளினைத்தின் அடுத்த பிறப்பிற்காளை மாடாய்ப்பிறந்து பெருமானுக்குத் தைலமமைக்குஞ்செக்குமரமிழுக்குந் திருத்தொண்டினுக் காளாவோமென்று நினைத்துத் தின்றேனென்றுசொல்ல, அங்ஙனமாயின் யானச்செக்கினை யிழுக்கும் மற்றொருதாய்ப் பிறக்கும்படி நின்வாயிலுள்ள வெள்ளிற் சிறிது தருவாயாகவென்று இரந்துபுசித்து அவனைப்பன்முறை வணங்கி வேண்டியவைகளைக்கொடுத்தனுப்பினர். பின்பொருநா ளவ்வூர்ப்புறத்தி லுருண்டு கிடந்த வொருமண்டையோட்டினைக் கண்டு இது இந்நகரின்கணுள்ள சிவனடியார்கள் திருப்பாத

தூளியணியும்படி யுருண்டு கிடக்கின்றது போலு மென்றெண்ணி அதற்குப்பன்முறை நமஸ்கரித்து அடியேன்றலையு மிங்ஙனமாகுகவென்று பிரார்த்தித்து வந்தனர். அதன் பின்னர் ஒருநாள் கோயிற் பிரகாரத்தில் நாய்மலமிருக்கக்கண்டு தமதுஉத்தரியத்தால் வாரியெறிந்து இதனை யெடுத்து சுத்தஞ் செய்யும் படியாகிய திருத்தொண்டினைச் செய்ய வென்ன புண்ணியஞ் செய்தோமோவென்றுமகிழ்ந் திருந்தனர். பின்பு ஒரு நாள் நகர்ப்புறத்து வேப்பங்கனி யுதிர்ந்திருக்கக்கண்டு அவைகளைச் சிவலிங்கப் பெருமானெனவும் அவ்வேம்புகளைச் சிவலிங்கங் காய்க்கும் விருக்ஷமெனவும் நினைத் தந்த விருக்ஷங்களைப் பானுவின் கதிர்தாக்காவண்ணம் பந்தலமைக்கச்செய்தனர்.

இப்படியாக வரகுணபாண்டியர் நீங்காத பேரன்புடையராயங்கு வீற்றிருக்குநாளில் விக்கிரமச் சோழன்றவத்தாற் பெற்றெடுத்த மிக்க ரூபவதியாகிய ரதிதேவியு நாணத் தக்க பேரழகையுடைய பெண்கள் நாயகமாகிய காந்திமதி என்னும் பெண்ணை மணம்புரிந்து அன்றிரவில் பள்ளியறைக்குச்சென்று தன் மனைவியுடைய பேரழகை நோக்கி இப்பெண்மணி நமதுமருதவாணருக்குத்தகுந் தவளாமே யென்றெண்ணி, உடனே மனைவிகரத்தைப்பற்றி ஆலயத்திற் சென்றனர். அப்பொழுது நடுவிராத்திரி யாகையால் கோயிற்கதவு திருக்காப்பிட்டிருந்தது, வரகுணபாண்டியர். அக்கதவைத் தட்டி மருதப்ப! என்று கூப்பிட, இவர் பக்திவலை

யிற்பட்ட மருதப்பெருமான் றிருவருளாற் றிருக்க தவந் திறக்கப்பட்டது. உடனே வரகுணதேவர் கோயிலுட் சென்றுமருதவாணர்பால் அப்பெண்ணை விட்டு எம்பெருமானே! இப்பெண் தேவரீரது திரு வுள்ளத்திற் குகந்தவளாவளெனக் கொண்டுவந்தே னென்று சொல்லித் துதித்து நின்றனர். உடனே மருதவாணர் அப்பெண் கரமொன்றினை மாத்திரம் நீக்கி சிவலிங்கத்திலயிக்கியஞ் செய்து கொண்ட னர்பின்புவரகுணபாண்டியர்திரும்பியரன்மனைக்கு வந்து சந்தோஷமாயிருந்தனர் கோயிற்கதவு முன் போற்றிருக்காப் பமைந்தது. இப்படியிருக்கமறு நாட் காலையில் கோயிலதிகாரிகள் வந்து திருக் காப்புக்களைந்து மருதவாண மகாலிங்கத்தில் ஒரு வளையலையணிந்த பெண்ணின் றிருக்கரமொன்று மணிக்கட்டுவரையி லிருக்கக்கண்டு பயந்து வர குணபாண்டியருக்குத் தெரிவித்தனர். உடனே பாண்டியர் கோயிலுட்சென்று கோயிற்றுறையா ரறிவித்தவண்ண மிருக்கக்கண்டு மனமுருகிநின்று எம்பெருமானே ! பாவியேன்றீண்டியதாலிக்கரம் எச்சிலென் றொதுக்கப்பட்டது போலுமென்று வருந்தி நிற்க "வரகுண! நின்றிருத்தொண்டினை யுலகினரறிந்துய்யுமாறு வெளியிடும் பொருட்டிவ் வாறு செய்தனம்', அஞ்சன்மின் என்று ஓர் அசரீரி யுண்டாய் வெளியிலிருந்த அக்கன்றுக்கரமும் மரு தவாண மகாலிங்கத்துள் மறைந்தது. தேவர்கள் புஷ்பமாரி பெய்தார்கள் அடியவர்கள் அரகர வென்று முழக்கஞ் செய்தார்கள். பின்பு வரகுண தேவர் அநேகவரிய திருத்தொண்டினைச் செய்து

மருதவாணர் திருவடியடைந்தனர் இக்கருத்தையே பட்டினத்தடிகள் திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில்

வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன கையிற்கட்டவிழ்ப் பித்து
மோடும் பன்னரி யூளை கேட் டரனைப்
பாடின வென்று படாம்பல வளித்துங்

குவளைப் புனலிற் றவளைய ரற்ற
வீசன் றன்னை யேத்தின வென்று
காசும் பொன்னுங் கலந்து தூவியும்

வழிபடு மொருவன் மஞ்சனத் தியற்றிய
செழுவிதை யெள்ளைத் தின்னக் கண்டு
பிடித்தலு மவனிப் பிறப்புக் கென்ன
விடித்துக் கொண்டவ னெச்சிலை நுகர்ந்து

மருத வட்டத் தொருதனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி
யும்மைப் போல வெம்மைத் தலையுங்
கிடக்க வேண்டுமென் றடுத்தடுத் திரந்துங்

கோயின் முற்றத்து மீமிசைக் கிடப்ப
வாய்த்த தென்று நாய்க்கட்ட மெடுத்துங்
காம்பவிழ்ந் ததிர்ந்த கனியுருக்கண்டு
வேம்புகட் கெல்லாம் விதான மமைத்தும்

விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று
புரிகுழற் றேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய வன்பின் வரகுண தேவர்

என்று கூறியிருக்கின்றனர்.

திருவிடைமருதூரி லிருந்து புறப்பட்ட பட்டினத்தடிகள் வழியிலுள்ள தலங்களை தரிசித்து திருவெண்காட்டினையடைந்து திருவீதி வலம் வந்து கோயிலுட் சென்று சிவபரஞ்சுடரைத் தரிசித்து,

பூதமுங்கரணம் பொறிகளும்புலனும் பொருந்தியகுணங்களோர் மூன்றும்,நாதமுங்கடந்த வெளியிலேநீயுநானுமாய்நிற்கு நாளுள தோ,வாதமுஞ்சமய வேதமுங்கடந்த மனோலயவின்ப சாகரனே, ஏதுமொன்றறியேன்யாதுநின்செயலை யிறையவனேயேகநாயகனே

யாவரேயிருந்தும் யாவரேவாழ்ந்தும் யாவரோயெமக் குறவாயும் தேவரீரல்லாற் றிசைமுகமெனக்குத் திருவுளமறிய வேறுளதோ பாவலரொருவன் செந்தமிழ்க்கிரங்கிப் பறவையாரூடலை மாற்ற ஏவலாகி யிரவெலாமுழன்ற விறைவனேயேக நாயகனே.

உண்டதேயுண்டுமுடுத்ததேயுடுத்துமடுத்தடுத்துரைத்ததேயுரைத்தும்,கண்டதேகண்டுங் கேட்டதேகேட்டுங் கழிந்தனகடவுநாளெல்லாம்,விண்டதாமரைமேலன்னம்வீற்றிருக்கும்விழவறாவீதிவெண்காடா,அண்டரேபோற்றவம்பலத்தாடுமையனேயுய்யுமாறருளே

என்ற பாக்களைப்பாடி யருள்விடை பெற்றுச் சென்று அங்குச் சின்னாள் வீற்றிருந்தனர்.

இங்ஙனமிருக்க, ஊர்கடோறுஞ்சென்று கூலி வேலையாற் சீவனஞ்செய்துவந்தசேந்தனாரின் மனைவியாரும் மைந்தனும் தொண்டைநாடடைந்து அங்குள்ள ஒரு கிராமத்திற் சின்னாள் வசித்தனர். அப்பொழுது ஒருநா ளக்கிராமத்துச் சிறு பிள்ளைகளுடன் மிக்கவறிவுற்ற விச் சேந்தனார் பிள்ளையுஞ் சேர்ந்து விளையாடிக்கொண்டிருந்தது அவ்விளை

யாட்டு முன்னிலையிற் சண்டை நேரிட்டுச் சில பிள்ளைகளிச்சேந்தனார்குமாரனைப்பிடித்து அடித்து பிதாவில்லாப்பேதை தந்தையில்லாத் தரித்திரன் தகப்பனில்லாத் தறிதலை யென்று இகழ்ச்சியாகப்பேச, அதனைக்கேட்டவிச்சிறுவன் மிக்க துயரமடைந்து மனவருத்தத்துடன் தன்றாயிடத்திற் சென்று சண்டை நடந்த செய்தியு மவர்கள் தூஷித்ததையுங் கூறி யழத் தொடங்கினன் சேந்தனாரின் மனைவியார் தன்புதல்வனுக்கு வேண்டியதேறுதல் சொல்ல அச்சிறுவன் அழுகை தீர்ந்து அம்மா என்பிதாவெங்கே? அவர் யாவர்? அவர் பெயரென்னை? அவருக்குச்சுற்றத்தினரொருவருமில்லையோ? உனக்கு உறவின ரொருவருமில்லையோ?என்று வினவு குழந்தையைப் பார்த்து மிகுந்த வியாகூலத்துடன் நாங்கூர் சேந்தனாரின் மனைவியார் தன் மரபின் வரன்முறை யாவுஞ் சாங்கோ பாங்கமாகக்கூறியுன்றந்தையாரின்னமு மிராஜனுற் சிறைச்சாலை யிருக்கின்றனர் அவருக்குத் தலைவராகிய பட்டினத்துச் செட்டியாரும் பரதேசியாராகித் தேசசஞ்சாரஞ்செய்கின்றனர் இதுதானுள்ள செய்தியென்று சொல்ல அதனைக்கேட்ட வச்சிறுவனிந்த விபரீதமெல்லாம் அரசனால் நடந்ததை எனது தந்தைக்குத் தலைவராகவிருந்த பட்டினத்துச் சுவாமிகளுக்குத் தெரிவித்து அவராலித்துன்பத்தினை நீக்கிக் கொள்ள வேண்டுமென்று நினைத்து தன்றாயை யழைத்துக் கொண்டு பட்டினத்துச் சுவாமிகளெவ்விடத்தில் வாசஞ்செய்கின்றன ரெவ்வகையிற் சஞ்சரிக்கின்றரென்று தெரிந்துகொள்ளும்பொருட்டு ஊர்கடோ

றுஞ்சென்று விசாரித்துப் பன்னாள்வரையிலுந் தேடியலைந்து திரிந்து சுவேதவன மென்னுந் திருவெண்காட்டினுக்குவந்துசேர்ந்தனன் அங்குப் பட்டினத்துச்சுவாமிகள் பரதேசிகோலத்துடனவ் வூருக்குப்புறம்பாகிய காட்டில் வாசஞ்செய்கின்றன ரெனக்கேள்வியுற்று அதிகசந்தோஷத்துட னிவ் விருவரும் அக்காட்டில்நுழைந்து வருந்தித்தேடி யங்குள்ள ஓர்குளக்கரைமேட்டில் நிட்டையிலிருக் கக்கண்டு அந்தச்சுவாமிகளது திருவடித்தாமரைக ளில்அடியற்றபனைபோற் சாஷ்டாங்கமாகவிழுந்து நமஸ்கரித்துக் கோவென்றலறிப் பிரலாபித்தனர்.

சேந்தனார் சிறைச்சாலையினின்று மீண்டது

அப்போது பரதேசியா ரசைவற்ற ஞானயோ கத்தைவிட்டுச் சகமுகமாகத் திரும்பிப்பார்த்து நீவிர் யாவர் நுமக்குநேரிட்ட துயரமென்னை ? என்றுவினவ, சேந்தனார்மனைவியார், சுவாமிகளே! யான், தங்கட்குமுன்னம் பிரதானகாரியதரிசியா யிருந்த சேந்தனாரடியாள் இக்குழந்தையவர் குமா ரன். தேவரீரவதூதநெறிகொண்டில்லறந்துறந்து புறப்பட்டநாளிற்றங்கள் திரவியத்திற் சிலவற்றை யடியாளின் கணவர் மறைத்துவைத்திருப்பதாக அரசன்கோபித்து எங்கள்வீட்டைக் கொள்ளை யிடச்செய்து அவரைச்சிறைப்படுத்தினன் இத்தன் மையால் யானு மிக்குழந்தையுஞ் சிறுமை யடை ந்து தேசப்பிரஷ்டர்களா யையமேற்றுங் கூலித் தொழில் செய்துஞ் சீவனஞ்செய்து இதுகாறு முயிர்பிழைத்திருக்கின்றனம் எனதன்புள்ளகணவ ராகிய சேந்தனாரின்னமுமச் சிறைச்சாலையிலிருக்

கின்றனர் அவரைக்கண்டு நெடுநாளாயின இச்சிறு வன் அவரைக் காணவிரும்பி யாருத்துயராலிடர்ப் படுகின்றனன். தேவரீர் கடாட்சத்தாலெனது நாயக ராகிய சேந்தனரை வரவழைத்துக் காட்டவேண்டு மென்றுபிரார்த்திக்கப்பட்டினத்துச்சுவாமிகள்பரம சிவத்தின்றிருவருளைச் சிந்தித்துக் குழந்தையுந் தாயையும் பார்த்துமனமிரங்கி நீங்களிருவரும் இக் கிராமத்திற்போயிருங்கள் சேந்தன் நாளைக்கு வரு வனென்று சொல்லியனுப்பினர் இவ்விருவரும் அங்ஙனமேசென்றிருக்கவும் மற்றைநாட்காலையில் பட்டினத்தடிகள் அவ்வூர்ச்சுவேதாரண்ணியேசுரர் சந்நிதியையடைந்து,

மத்தளைதயிருண்டானு மலர்மிசைமன்னினானும்
வித்தமுந்தேடிக்காணு நிமலனேயமலமூர்த்தி
செய்த்தலைக்கயல்பாய்காங்கூர்ச் சேந்தனைவேந்தனிட்ட
கைத்தளைநீக்கியென்முன் காட்டுவெண்காட்டுளானே.

என்ற திருப்பாசுரத்தினைத் திருவாய்மலர்ந்தரு ளினர்உடனேபரமகருணாநிதியாகியசிவபெருமான் கட்டளைப்படி கணேசமூர்த்தி தனதுதுதிக்கையால் சிறைச்சாலையிலிருந்தசேந்தனரைத்தூக்கிப் பட்டி னத்தடிகள்முன்விட்டனர் சேந்தனர் கனவுகண்டு விழித்ததுபோல் எதிரில்நிற்குந் தனது குருசிகா மணியையும் தன்மனைவி மைந்தரையுங்கண்டுதிடுக் கிட்டுக்குருநாதனைப்பணிந்து இச்சிறைச்சாலையி னின்று மீட்பித்ததுபோற் பாசச்சிறையினின்று மீட்டு அடியேனுய்யும்படித் திருவுளம்பற்றவேண் டுமென விண்ணப்பித்தனர் அடிகள்இவர்பக்கு

வத்தை நோக்கித்தனது திருநோக்கால் தீட்சை செய்து சேந்த! நீ உன்குடும்பத்துடன் சிதம்பரத்துக்குச்சென்று காட்டுவிறகொடித்து விற்றுச்சிறுவிலைகொண்டு ஓர் சிவனடியாருக்கமுதூட்டிப்பின் நின்மனைவிமைந்தருடன் உண்டுகாலங்கழிக்கக்கடவாயென்றுகட்டளையிட்டுப் புறம்போந்தனர்.

சேந்தனார் தில்லைநகரடைந்ததும்,
திருவாதிரையிற் களி நிவேதனஞ்செய்ததும்.

உடனே சேந்தனார் தன் குருநாதன் கட்டளையைச்சிரமேற்கொண்டு அங்கிருந்து புறப்பட்டுத் தில்லைநகரடைந்து அவ்வூருக்குப்புறத்திலுள்ள காட்டிற்சென்று விறகொடித்து வந்து விற்றுச்சீவனஞ் செய்து வந்தனர் இங்ஙனம் நிகழ்கையில் ஏழுநாள் வரைக்கும் விடாமழைபெய்தது அதனால் சேந்தனார் விறகொடிக்கக் காட்டிற்குச் செல்லாமையால் உணவு முதலியனவில்லாமல் பசிநோயால் மெலிந்து வருந்தி அடவிக்குச் சென்று விறகு சேகரித்துவந்து விற்கக்கூறியும் கொள்வாரற்று வருந்திச் சிறிதளவு பொறிமாவுக்கு மாறி அம்மாவையெடுத்துக்கொண்டு தனதில்லஞ்சேர்ந்து தன் மனைவியார் கரத்திலளித்துக் களியமுதுசெய்து வைக்குபடிபடி சொல்லிவிட்டுத் தனதுஞானாசிரியர் கட்டளைப்படி யமுதூட்டுதற்குச் சிவனடியாரைத் தேடிச்சென்றனர் சேந்தனார்மனைவியார் அப்படியே செய்து அடியார் வரவை எதிர்பார்த்திருந்தனர்.

சேந்தனார் அவ்வூர்முழுதுஞ்சுற்றிப்பார்த்தும் ஓர்சிவனடியாரையுங் காணாது திகைத்துத் தன்குரு

நாதனைத்தியானித்துத் தீராத்துயர்க்கடலிலாழ்ந்து பரிதபித்தனர் தம்மடியார்படுந்துன்பத்தினைச் சகியாது அக்கணமேயதனை நிவர்த்திக்கும் பரங்கருணைத்தடங்கடலாம் நடராஜவள்ளலார் இச்சேந்தனூர் படுந் துயரத்திற்கிரங்கி ஓர் வயோதிக சன்நியாசி ரூபமாய்த்தோன்றி இவர் போகும் வழியினோர் மண்டபத்தில் வீற்றிருந்தனர் சேந்தனூர் அம்முதிய அந்தணரைக்கண்டு கன்றினைப்பிரிந்ததலையீற்றுப் பசுவே போலோடி அவர்பாதத்தில் வீழ்ந்து சுவாமிகாள்! அடியேன் குரவனுணைப்படித் திருவமுதூட்டுதற்குஓர்சிவனடியாரைக்காணுது வருந்துகின்றனன் எங்கள் முன்னோர்செய்த தவப்பயனால் தாங்களிங்கெழுந்தருளினீர்கள் போலும் தேவரீர் அடியேனில்லத்திற் றிருவமுது கொள்ளும்படித் திருவுளம் பற்றவேண்டுமெனப் பிரார்த்தித்தனர் முதியராய் வந்த அழகிய நிருத்த சபேசர் அதற்கிசைய சேந்தனு ரவரையழைத்துக்கொண்டுதமது இருப்பிடஞ் சேர்ந்து பாதந்துலக்கிப் பல பணிசெய்து பீடத்திருத்தித் தனது மனைவியார் செய்து வைத்திருந்த களியமுதினைப் படைத்தனர் சேந்தனூரது பத்திவலையிற் கட்டுண்ட சிற்சபேசர் அக்களி யமுதிற்கொஞ்சமுண்டு எஞ்சியவற்றைத் தனது ஆடையினோர் மூலையில் முடிந்துக்கொண்டு அந்தரதானமாயினர் களியமுதுண்டிருந்த வயோதிகரைக்காணுது சேந்தனுருமவர் மனைவியாரும் வியப்புற்று வந்தவரித்தகையரெனத் தெரியாது வருந்தினர் அப்பொழுது ஆடகச்சபேசர். தனது

அருட்சத்தியாகிய உமாதேவியாரோடு இடபவாகனத்தி லாரோகணித்துச் சேந்தனுர் முன் விசும்பிற்றேன்றினர்.

இதனைச் சேந்தனுர்கண்டுபரவசமுற்று சிரமேற் கரங்குவித்து எம்பெருமானே! என்னுண்டவனே! என் தந்தையே! என்தாயே! என்குருவே! என்தெய்வமே! என்குலதெய்வமே என்கண்ணின்மணியே! கருணைக்கடலே! கற்பகக்கனியே! கருணைநிதியே! என்றுதுதிக்க, பரமேசுவரர் இவரைநோக்கிசேந்த நின்னன்பிற்கு மிகமகிழ்ந்தனம். நினக்கு இந் நாட்டரசனுலளவிறந்த திரவியங்களளிப்போமாக, அதனையடைந்து இம்மையிற் சகலபேறுகளையும் பெற்றநுபவித்து மறுமையிற் சாயுச்சிய பதவியை யடைவாயாகவென்று திருவாய்மலர்ந்தனர். அதனைக்கேட்ட சேந்தனுர் பரவசமுற்று பெருமானே! தேவரீர் ஆஞ்ஞைப்படியளவிறந்த திரவியங்களைப் பெற்றல் அதனையோம்புதலிலும் அதனுலுண்டாகுஞ் செருக்கிலும்என துவாணுளை வீணுளாயொழிக்க நேரிடுமாகையால் அங்ஙனமின்றி எனது குடும்பப் பாதுகாப்பினுக்கு வேண்டிய சிறிதளவு பொருளினைமாத்திர மனுக்கிரகிக்கக் கிருபைபாலிக்கவேண்டுமென்று பிரார்த்தித்த தன்றியும், "தன்னைப்போ லுலகினரின்புறுமாறு" எத்தகைய தீமையைச்செய்தகொடியவரேயாயினும் இத்தனுர்மாசத் திருவாதிரை நட்சத்திரத்திலே அன்போடு விரதமிருந்து தேவரீருக்குக் களியமுது நிவேதனஞ் செய்வாராகி லவரது தீமைகளெல்லாந் தீயினிற்

பஞ்சுபோலொழிந்து தேவரீர் அடியேனுக்கிரகித்த வண்ணமே இம்மையிற் சகலபோகங்களையுமனுப வித்து மறுமையிலழியாதபேரின்பவீட்டினை யடை யும்படி எவையெவைகளை விரும்புகின்றனரோ அவைகளை யெல்லாமுடனே யடையும்படிக்கும் அனுக்கிரகிக்கவேண்டுமென்றுபிரார்த்திக்க * பர மேசுவரரங்ஙனமேயாகுகவென்றுமறைந்தனர் ஒரு வனுண்ணவு முழுவுணவாகாத அக்களிய முது விருந்தினரும் சேந்தனாரும் அவரதுமனைவியாரும் மைந்தரும் உண்டுசுகிக்கும்படி பெருமான்றிரு வருளா லெடுக்கவெடுக்கக் குறையாதிருந்தது. சேந்தனாரளித்த களியமுதினை ஸ்ரீசிதம்பரேசர் கன கசபைக்குக் கொண்டுபோ யங்குதரிசனார்த்தமாய் வந்திருந்த பிரமாதிதேவர்கட்குக்கொடுத்துச் சேந் தனாரன்பின்றிறத்தை வெளியிட்டனர்

இங்ஙனமிருக்க, சோழமகாராஜன் அழகிய சிற்றம்பலவாணருக்குப்பிரதிதினமும்பூசனையியற்று வதும் அதன்முடிவிற் றிருவருளா லப்பூசனையா தொருகுறைவுமின்றி நடந்ததற் கறிகுறியாயோர் மணியோசைகேட்பதும் அதன்பிறகுதான் அன்ன முதலியன அருந்துவதும் வழக்கமாய் நடந்து வந்தன அங்ஙனமே அற்றைக்கும் அரசன் பெரு

---

* இதுமுதல் மார்கழிமாசத் திருவாதிரையிலே நடராஜப் பெருமானுக்குக் களிநிவேதனஞ்செய்யும் வழக்கமுண்டாயிற்று இங்ஙனமநேகர் நிவேதித்து இஷ்டகாமியங்களைச் சித்திக்கப்பெற்ற சரித்திரங்கள் பலவுள அவைகளைச்சமயம் நேர்ந்துழி தனிமையாக வெளியிடுவாம்.

மானை பூசிக்கச்செய்து காத்திருந்தனன் நெடுநேரமாகியும் மணியோசைகேட்டிலனுகையால் இவ்வரசன் மிக்கவியாகூலத்துடன் இன்றியற்றிய பூசையில்யாதுகுறையுளதோ யாது தவறிழைத்தனனோவெனமிகவருந்தி அன்னபானாதிகளருந்தாதுபூட்பியிற்படுத்துச் சிறுநித்திரையிலிருந்தனன். அப்பொழுது மறையினாலு மயனாலுமாலாலு மறியொணாவிறைவர் ஓர் அந்தணருருவமாயவ்வரசன்கனவிற்றோன்றி அரசனே! நமதுசேந்தனளித்தகளியினையுண்ணப் போயினோமாகையால் இவன்மணியோசைகேட்கத் தடையாயிற்று. இதுவேயன்றி நின் பூசனையில் யாதொருதவறு நிகழ்ந்ததில்லை துயருறலொழிக என்று கூறிமறைந்தனர் உடனே அரசன் விழித்துத் திடுக்கிட்டெழலும்வழக்கம்போல மணியோசை கேட்க அதைக்கேட்டுப்பேரானந்தப் பெருங் கடலுட்டிளைத்து அச்சேந்தனா ரெங்குளரோ எத்தகையருஷிர்ந்தவன்பினரோஎப்பொழுது அவரைத் தரிசிப்போமோ வென்னுங் கவலையுடன் தனது மாளிகைக்குச்சென்றனன். மற்றைய நாட்காலையில் தில்லைவாழந்தணர் முதலியோர் சிற்சபைக்கு வந்து திருக்காப்புக் களைந்துகளியுதிர்ந்துகிடக்கக் கண்டு எவரோவிவ்வா றசுத்தஞ்செய்திருக்கின்றனர், இதனை நீக்கிச்சுத்தஞ் செய்தல்வேண்டுமென்றரசனுக் கறிவித்தனர். அரசன்வந்துபார்த்து தான்கண்டகனவைக் கூறிப் பெருமான் றிருக்கருணையையுஞ் சேந்தனாரது அன்பிற்றிரத்தினையும் நினைந்து நினைந்து அழலிடைப்பட்ட வெண்ணெய்போலுருகி வியப்புற்று உதிர்ந்துகிடந்தகளி

யினைத்திரட்டித் தானுஞ் சிவனடியார்களு முண்டு என்ஞ்ஞான்று மழியாத பேரின்ப வீடாகிய குஞ்சித பாதநிழலையடையும்பெரும்பாக்கியத்தை பெற்றனர்

## சேந்தனார் திருப்பல்லாண்டு பாடி இரத மோட்டுவித்ததும் முத்தியடைந்ததும்

அப்பொழுது மார்கழி மாசம் பிரமோற்சவ காலமாதலால் ஸ்ரீநடராஜப்பெருமானை ரதத்தி லெழுந்தருளச்செய்து அதனையிழுக்கவும் கொஞ் சமு நகராமையால் அரசன்முதலினரெல்லோரும் மிக்கவியாகூலத்துடனதையிழுக்குமுயற்சியிலிருந் தனர். அப்பொழுதங்குச் சேந்தனாரும் வந்திருந் தனர். இவரது பத்திப்பேரன்பை வெளியிடும்பொ ருட்டுப் பெருமான்றிருவருளால் "சேந்த! இவ்விர தம் செல்லும்படி பல்லாண்டு பாடுவாயாக" என்றோ ரசரீரியுண்டாயிற்று இதனைக் கேட்ட சேந்தனார் பெருமானே நாயேனையுமோர்பொருட்படுத்தி இவ் வரிய திருத்தொண்டினைச்செய்ய ஆளாக்கிய நின் றிருவருளிற்கு யாது கைம்மாறு செய்யவல்லேன் என்றுநினைந்து என்புநெக்குருக நாத்தழுதழுப்ப மனங்கசிந்துருகிப் பெருமான் கட்டளையைச் சிர மேற்கொண்டு,

"மன்னுகதில்லை வளர்கநம்பத்தர்கள் வஞ்சகர்போயகலப்
பொன்னின்செய்மண்டபத்துள்ளேபுகுந்துபுவனியெல்லாம் விளங்க
அன்னநடைமடவாளுமைகோனடியோமுக் கருள்புரிந்து
பின்னைப்பிறவியறுக்கநெறிதந்த பித்தற்குப்பல்லாண்டு கூறுதுமே"

என்றதொடக்கத்தனவாகிய பதின்மூன்றுபாசு ரங்களடங்கிய திருப்பல்லாண்டினைப்பாடியருளினர்

உடனேஇரதப் புறப்பட்டுத்திரு வீதிவலம்வந்து இருப்பிடஞ்சேர்ந்தது அதனாலரசனும் தில்லைவாழந்தணரும் மற்றுஞ்சிவனடியார்களும் சேந்தரிவர்தானெனத்தெரிந்துபணிந்துவந்தித்தனர். அன்றியும் அவ்வரசன் இச்சேந்தனாரது கிருகத்திற்கு வேண்டியபொருள்களையளித்து இவரதுவறுமைநோயை நீக்கினன். இங்ஙனம்சின்னாட்சென்றபின் சேந்தனார் மற்றைச்சிவாலயங்கட்குச் சென்று சிவபெருமானைத் தரிசிக்கக்கருதிப் புறப்பட்டுத்தெற்குநோக்கிச்சென்று சீகாழியுள்ளிருக்குவேளூர் மயிலாடுதுறைமுதலிய தலங்களைத் தரிசித்துத் திருவிடைக்கழி யென்னுந் திருநகரடைந்து அங்கு எழுந்தருளியிருக்கும் முருகப்பிரானைத் தரிசித்து வீற்றிருந்தனர். அன்றிரவு சேந்தனார் கனவில் சண்முகப்பெருமான் ஓர்வேதிய மதலைவடிவமாய் வந்து சேந்த! "நம்மைப் பாடுவாயாக" எனக்கூறி மறைந்தனர். உடனே சேந்தனார் விழித்து பெருமான் கட்டளைப்படி,

"மாலுலாமனந்தந்தென் கையிற்சங்கம் வல்வினான் மலைமகண்மதலை
மேலுலாந்தேவர் குடிமுழுதாளுங் குமாரவேள் வள்ளிதன்மணாளன்
சேலுலாங்கழனித் திருவிடைகழியிற்றிருக்குராநீழற்கீழ்நின்ற[ளே
வேலுலாந்தடக்கைவேந்தனென்சேந்தனென்னுமென்மெல்லியலிவ

என்பதுமுதலிய பதினொறு திருப்பாடல்களடங்கிய திருவிசைப்பாபாடித்துதித்து அங்குச்சின்னாளிருந்து புறப்பட்டுத்திருவீழிமிழலையையடைந்து வீழிநாதரைத் தரிசித்து நாம் வாயிகத்தொண்டு செய்தல்வேண்டுமென்பது பெருமானது திருவுள்ளம்போலும் எனநினைந்து,

"ஏகாகயகனை யிமையவர்க்கரசை யென்னுயிர்க் கமுதினையெதிரில்
போகநாயகனைப்பியல்வணற்கருளிப்பொன்னெடுஞ்சிவிகையாவூர்ந்
மேகநாயகனைமிகுதிருவீழிமிழலைவிண்ணிழிசெழுங்கோயில் [த
யோகநாயகனையன்றி மற்றொன்று முண்டெனவுணர்கிலேன் யானே"

என்பதுமுதலிய பன்னிரண்டு செய்யுட்களைத் திருவாய்மலர்ந்து அங்கிருந்துபுறப்பட்டுத்திருவாவடுதுறையையடைந்து அங்ஙனமே பரமேசுவரைத்தரிசித்து,

"பொய்யாதவேதியர் சாந்தைமெய்ப்புகழாளராயிரம் பூசுரர்
மெய்யேதிருப்பணிசெய்சீர் மிகுகாவிரிக்கரைமேய
வையாதிருவாவடுதுறை யமுதேயென்றுன்னை யழைத்தாக்கால்
மையார்தடங்கண் மடந்தைக்கொன்றருளாதொழிவதுமாதிமையே,"

என்பது முதலிய பதினொருதிருப்பாசுரங்களருளிச்செய்து பின்னும்பல தலங்கட்குற்சென்று பற்பலபாடல்களைபாடிப்பெருமானைத்தரிசித்து மீட்டுந்தில்லை நகரடைந்து அம்பலவாணருக்குநெடுங்காலம் பற்பலதிருத்தொண்டுகள் செய்திருந்து குடும்பத்துடன அவ் வம்பலவாணரது குஞ்சிதபாத நீழலையடைந்தனர்.

## பட்டினத்தடிகள்

### சிதம்பரம் முதலிய தலங்களைத்தரிசித்தது

இங்ஙனமிருக்க திருவெண்காட்டினிலிருந்து புறப்பட்ட பட்டினத்தடிகள் பிள்ளையாரவதரித்த பிரமபுரத்தையடைந்து திருவீதிவலம்வந்துகோயிலுட்சென்று திருத்தோணியப்பரையும், திருநிலைநாயகியம்மையையுந் தரிசித்து,

"திருவளர்பவளப் பெருமலைமணந்த"

என்பது முதலாகவுடைய திருக்கழுமல மும் மணிக்கோவை பாடிமுடித்துச் சின்னாளங்கிருந்து புறப்பட்டுப் பெரும்பற்றப்புலியூரென்னுஞ் சிதம் பரமடைந்து தூலலிங்கமாகிய திருக்கோபுரத்தி னைத்தரிசித்துத் திருவீதிவலம்வந்து கோயிலினுட் சென்று உலகுய்யவாடும் நிருத்தசபேசரைக்கண்டு அன்புமேலிட்டு என்புநெக்குருகஉரோமஞ்சிலிர்ப் பத்தன்னைமறந்து சற்றுநேரமொன்றுந்தோன்றாது நின்று,

"பூமேலயனறியா மோலிப்புறத்ததே"

என்னும் பாசுரமுதலாகவுடைய கோயினான் மணிமாலைபாடிமுடித்து வணங்கி வெளியில்வந்து ஓர் மண்டபத்தில் வீற்றிருந்தனர் அப்பொழுது பசிவருத்தியதால்"பன்னகவாட" என்னும்பாடலைப் பாடஉடனேஉலகமாதாவாகியசிவகாமியம்மையார் ஓர் பார்ப்பனப்பெண்ணுருவமாய் வந்து பெருமா னுக்கு நிவேதித்த பிரசாதத்தினைக்கொடுத்தனர் அடிகளதனைப்பெற்றுப் திரும்பிபார்க்கையில் அவ் வம்மையாரைக் காணாதவராய்த் திடுக்கிட்டு அன்ன மளித்தது அம்மையாரென்றறிந்து தொழுதுதோத் தரித்துப் பிராட்டியார் நின்ற அடிசுவட்டினைக்கண் ணொற்றிப் பொடிமுடிக்கணிந்து நாயேனையுமோர் பொருட்படுத்தி பஞ்சினுமெல்லிய பாதம்நோக நடந்துவந்து அனுகிரகித்த நின்பேரருளிற்கு யாதுகைம்மாறு செய்யவல்லேனென்று துதித்து

அப்பிரசாதத்தினையுண்டு பசியாறிச் சிவஞானநிஷ்டையில் வீற்றிருந்து காலந்தோறும் அம்பலவாணரைத்தரிசித்து,

நினை மின்மனனே நினைமின்மனனே
சிவபெருமானைச் செம்பொனம்பலவனை
நினைமின்மனனே நினைமின்மனனே:

என்பதுமுதலிய மூன்றுதிருவகவல்களைப்பாடித் துதித்துப் புறம்போந்து,

"காம்பிணங்கும் பணைத்தோளார்க்கு பொன்னுக்குங் காசினிக்குந்
தாம்பிணங்கும் பலவாசையும் விட்டுத் தனித்துச்செத்துப்
போம்பிணந்தன்னைத் திரளாகக்கூடிப் புரண்டினிமேற்
சாம்பிணங்கத் துதையோவென்செய்வேன் றில்லைச்சங்கரனே.

என்பதுமுதலிய விருபதுதிருப்பாசுரங்களைப் பாடித் திருவொற்றியூருக்குப் போகக்கருதி அங்கு நின்றும் புறப்பட்டுத் திருத்தினைநகர், விருத்தகிரி, திருப்பாதிரிப்புலியூர், திருவதிகை, திருவாமூர், திருநாவலூர், திருவெண்ணைநல்லூர் திருக்கோயிலூர் முதலிய தலங்களைத்தரிசித்து; எத்தகை கொடிய பாவியேயானாலும்தன்னைநினைத்தமாத்திரத்தில்முத்தியளிக்கவல்லதிருவருணையைச்சமீபித்துக்கிரியைப்பன்முறைவலம்வந்து ஆலயத்துட்சென்றுமாலயன்றேடவொண்ணா மலைக்கொழுந்தாகிய அண்ணாமலையப்பரையும் உண்ணாமுலையம்மையாரையுந்

தரிசித்துத் துதித்துவெளியில்வந்து கிழக்குக் கோபுரவாயிலில் [] எழுந்தருளியிருந்தனர்.

அடிகள் சிலதினம் கோபுரவாயிலில் வீற்றிருந்துபுறப்பட்டுத் திருக்காஞ்சி நகரையடைந்து திருவேகம்பரைத் தரிசித்து அன்புபெருகவானந்த மேலிட்டு,

"மெய்த்தொண்டர்செல்லு நெறியறியேன்மிகநற்பணிசெய்
கைத்தொண்டர்தம்மிலு நற்றொண்டுவந்தில னுண்பதற்கே
பொய்த்தொண்டுபேசிப் புறம்புறமேயுன்னைப் போற்றுகின்ற
வித்தொண்டனென்பணிகொள்ளுதியோகச்சி யேகம்பனே,

என்றசெய்யுன்முதலாகவுடைய திருவந்தாதியையும்

" அறந்தானியற்றுமவனிலுங்கோடி யதிகமில்லந்
துறந்தானவனிற் சதகோடியுள்ளத் துறவுடையோன்
மறந்தானறக்கற்றறிவோடிருந்திரு வாதனையற்
றிறந்தான்பெருமையை யென்சொல்லுவேன்கச்சி யேகம்பனே"

என்றபாசுரமுதலிய திருவேகம்பமாலையையும்,

---

[] இக்கோபுரவாயில்லேயிருக்கையில் ஓர்நாள் அவ்வூர்க்கணிகைமாதொருத்தி யவ்வழியாய்ச்சென்றதாயும் அடிகள் அவளைக்கடைக்கணித் தழைத்ததாயும் அவள் இவர்பெருமையை யறியாது தாயிடமோடிக்கோபுரவாயிலிலிருக்கும்பயித்தியக்காரன் என்னை வாவென்றழைத்தனன் நான் வந்துவிட்டேனென்று தெரிவித்ததாயும் தாய் கேட்டு அந்தோ! வலியவந்தபுண்ணியப்பேறு வியர்த்தமாயிற்றேயென்று வருந்தி அப்பெண்ணைக் கூட்டியோடிவந்து அடிகள் முன்விட்டுப்பணிந்ததாயும் அப்பொழுது அடிகள் "தோடவிழும்பூங்கோதைத் தோகையினைப்போது தேடினவர்போய்விட்டார் தேறியிரு மாடீநீ யென்னைநினைத்தா லிடுப்பிலுதைப்பேனு னுன்னை நினைத்தாலுதை, என்றபாடலை யருளிச்செய்து திட்டையிலிருந்துவிட்டதாயும் அங்கு ஓர்சரகில் வெளிப்பட்டிருந்த அவாது வீரியத்தினையக்கணிகைமாது உண்டு கருப்பவதியாயிருந்து ஓர்பிள்ளையைப் பெற்றதாயும் அப்பிள்ளையே அருணகிரிநாதரென்று சொல்வதாயும் கர்னபரம்பரையாய் வழங்கிவருகிறது.

" திருமால்பயந்த திசைமுகனமைத்த
வருமேழ்பிறவியுமானுடத்துதித்து"

என்பதுமுதலிய கச்சித்திருவகவல்களையும் பாடிப் புறம்போந்து, சிலகாலம் கச்சிக்காரோணத் தருகில் வீற்றிருந்தனர். அப்பொழுது ஓரர்த்தயாமத்திற்பசிப்பிணி வருத்த,

" அத்திமுதலெறும்பீ றானவுயிரத்தனைக்குஞ்
சித்தமகிழ்ந்தளிக்குந் தேசிகா-மெத்தப்
பசிக்குதையாபாவியேன் பாழ்வயிற்றைப்பற்றி
யிசிக்குதையாகாரோணரே ,,

என்ற பாடலைப்பாட உலகன்னையாகியகாமாட்சியம்மைமார் வேதியமாதுருவமாய் வந்து திருவமுதளித்து மறைந்தனர். அடிகளதனைப்பெற்று உண்டுபசியாறி, அங்குள்ள காமக்கோட்டம், கச்சபாலயம். ஒணக்காந்தன்றளி கச்சிநெறிக் காரைக்காடு அநேகதங்காபதம், என்னுந்திருக்கோயில் களுட்சென்று பெருமானைத்தரிசித்து வெளியில்வந்துஓரிடத்தில்வீற்றிருந்தனர் அப்பொழுதுஉலகத்திலே கடவுண்மீது அன்புபாராட்டும் பெரியோர்களைநோக்கி நீங்கள் கல்லையுஞ்செம்பையுங்கடவுளெனத்துதிப்பது இழுக்கெனக்கூறும் விபரீதபுத்தியுடைய புறச்சமயிகளையும்; சிலர் தாங்கள் யோகஞானங்களைப் பெற்றவர்களென்றும், கல்லையுஞ் செம்பையும் சரியைகிரியாவான்கள் கடவுளென வணங்குவதுபோல் தாங்கள் வணங்கவேண்டுவதில்லை யென்றும் கூறும் போலியகச்சமயிகளையும். நோக்கி யவர்கட்குநற்புத்தியுண்டாகுமாறு "கல்லை

புஞ்செம்பையும் மங்களகரமாகிய ஒப்பற்ற ஈச னென்று போற்றுவோமில்லை. அதனுள் பிரகாசம் பொருந்திய திருவடியிணையுடைய ஈசுரன்வியாபித் திருத்த லுண்மையாதலின் அவ்வீசுரனைத்துதிக் கின்றோமென்னுங் கருத்தையுடைய"

* "உளியிட்டகல்லையு மொப்பிட்டசாந்தையு மூத்தையறப்
புளியிட்டசெம்பையும்போற்றுகிலேனுயர்பொன்னெனவே
யொளியிட்டதாளிரண்டுள்ளேயிருத்துவ துண்மையென்று
வெளியிட்டடைத்துவைத்தேனினிமேலொன்றும் வேண்டிலனே

என்றபாடலையும் பரமேசுவராது சர்வவியாபகலட்ச

※ இச்செய்யுளால் கல் செம்பு முதலிய ஜட பதார்த்தங்கள் உயர்ந்தபொருளென்று அவைகளைப் போற்றுவோ மில்லையென்றும் அதில்முதல்வன் உறைவதுண்மையென்றும் அம்முதல்வனைச் சரியைகிரியையோகவான்களும் தன்னையொத்தஞானவான் களும்வணங்கவேண்டுவது அத்தியாவசியமென்றும் விளக்கியபடியாம். இப்பாசுரத்தில் "பொன் என்றது,, மங்களகரமாகியபொருள் என்ற அருத்தமாகும், ஆகவே அம்மங்களகரமாகியபொருள் சிவம் என்றே துணிக. அன்றியும் பொன்னென்று மாத்திரங்கூறுது உயர்பொன்னென் றதெற்றிற்கெனின், பிரமாதிதேவர்கள்சிலகாலமங்களகரமாயிருந்து பின் அமங்களகரமாதலால் அவர்களன்றெனமறுத்து எஞ்ஞான்றும் அழியாத மங்களகரமாயிருக்கும் பரசிவம் என்பதனை விளக்கும் பொருட்டேயாம்.

நிற்க, ஈசன் தம்முள்ளிருத்தலால் அவனது உருவத்தையும்உருவ அருவங்களையும் கல் செம்பு என்றும் அதனைவணங்கவேண்டுவதில் லையென்றும் சொன்னதெனச் சிலர் கூறுவர் இது தகுதியன்று எங்ங னமெனில், அடிகள் ஆலயங்கடோறுஞ்சென்று பெருமானைத் தரிசி த்தப்பின் ஒற்றியூரிற்குவந்து காலந்தவறாது படம்பக்கநாதரைத்தரி சித்துத் தனக்குத்திருவெண்காட்டினிலளிக்கப்பெற்ற சிவலிங்கப் ருமானுக்குப்பூசனையியற்றிவந்ததாலிங்ஙனங்கூறுதலிழுக்காம் [பெ

வெளியிட்டு—சந்தேகமற்று
அடைத்து—மனத்தையுறுதிப்படுத்தி.

ணமறியாது, அவ்வீசுரனுற் றிருவாய்மலர்ந்தருளியவேதாகமங்களின் முடிபாம் குருலிங்கசங்கமம் என்னு முத்திறவழிபாட்டினில் இலிங்கவழிபாடு ஒன்றினைமாத்திரம் கைக்கொண்டு அதற்குச் சோபானமாகிய மற்றிருவழிபாட்டினையுந் தூஷித்துத் திரிபவரைநோக்கி "பரமேசுவரர் அவ்விலிங்கத்தினில் மாத்திரமன்று அதனிலும் மற்றெவ்விடத்தும் உறைவர் என்னுங் கருத்தையுடைய"

சொல்லிலுஞ்சொல்லின் முடிவிலும்வேதச் சுருதியிலும்
அல்லிலுமாசற்ற வாகாயந்தன்னிலு மாய்ந்துவிட்டோர்
இல்லிலுமன்ப ரிடத்திலுமீச னிருக்குமிடங்
*கல்லிலுஞ்செம்பிலு மோவிருப்பானெங்கள் கண்ணுதலே:

என்ற பாடலையும்பாடி அங்கிருந்து புறப்பட்டுத்திருகழுகுன்றஞ்சென்று தன்னைசதா மனதிற்றியானிக்கும் சர்வான்மாக்களுக்குந்தன துவீட்சண்யமுடைய நெடுதூரத்துற்ற விருட்சங்கள் புல்பூண்டுகள் முதலியவற்றிற்குந், அவைகளில் வசிக்குங்

---

*இப்பாசுரத்திற்றடியிற் "கல்லிலுஞ்செம்பிலுமோ விருப்பானெங்கள்கண்ணுதலே,,என்றுகூறியது.ஈசன் கல்லிலுஞ்செம்பிலு மாத்திரமாயிருப்பன், அன்று அவைகளில் உருவமாயும் அருநருவமாயும் அவையல்லாத மற்றெவ்விடத்தும் அருவமாயுமிருப்பன் என்பதனை விளக்கியயடியாம் அன்றியும் கண்ணுதல்என்பது நெற்றிக்கண்ணையுடையவன் என்று பொருள்தருதலால் அவ்வீசனை வழிபடுதற்கு உருவலட்சணமே சிறப்புடைத்தென்பதனை வற்புறுத்திக்கூறியவாருயிற்று.இதனுல் குரு சிவனடியார் வழிபாட்டுடன் சிவலிங்கவழிபாடு செய்யவேண்டுமென்று ஏற்படுகிறது. இதனுல் குருவையும் சிவனடியாரையும்வழிபட்டுச் சிவலிங்கவழிபாட்டினைத் தவிர்த்தலெணலுங்கூடாது இதற்குச்சான்ருக இப்பட்டினத்தடிகளே "சொக்கிட்டாண்மனைப்புக்குட்டிருடிய துட்டர்வந்து,திக்குற்றமன்னனைக்

கீடமுதலியசர்வஜந்துக்களுக்கும் பிறவிநோய்த்து ன்பங்களையகற்றிமோட்சவீடளிக்கும் வேதகிரியை வலம்வந்து பிரமன் விட்டுணு இந்திரன் முதலிய தேவர்களும் மனிதர்களும் எஞ்ஞான்றும் பூசித்துத் துதித்துவணங்கிநிற்க அம்மலையில் எழுந்தருளியி ருக்கும்வேதகிரிப் பெருமானைத்தரிசித்துச் சந்நிதி ல் நின்று.

" சாடேசெடியோகடற்புறமோ கனமேயிருந்த
நாடோககரோககர்கடுவோ நலமேமிருந்த
வீடோபுறத்திண்ணையோ தமியேனுடல்வீழுமிடம்
நீடோய்கழுக்குன்றி லீசவுயிர்த்துணைநின்பதமே

என்று பாடித்றுதித்து வெளியில் வந்து அவண் சிலபகல் சிவஞானநிஷ்டையிலிருந்தனர். பின்பு அங்கிருந்துபுறப்பட்டு மேற்குநோக்கிச் சென்று பற்பலபாடல்களைப்பாடிவழியிலுள்ளதலங் களைத்தரிசித்துத் திருக்காளத்திமலையைச்சமீபித்து

" மூப்போதுமன்னம் புசிக்கவுந்தூங்கவு மோகத்திலுற்
செப்போதுமிளமுலையாருடன் சேரவுஞ்சிவன்விடு
மப்போதுகண்கலக்கப் படவும்மமைத்தாயையனே
யெப்போதுகாணவல்லேன் றிருக்காளத்தியீச்சுரனே"

என்று துதித்து காளத்தியப்பரை தரிசிக்கப் பேரவாக் கொண்டு அந்நகரையடுத்த அடவிவழி

---

கேட்பதுபோற்சிவநிந்தைசெய்து, மிக்குக்குருலிங்கசங்கமநிந்தித்து வீடிச்சிக்கு, மெக்குப்பெருத்தவர்க் கேன்சொல்லுவேன் கச்சியே கம்பனே.,, என்றுகூறியுள்ளார். ஆகவே பசுவின்பால் அதன்றேக மெங்கும் வியாபித்திருப்பினும்அதன் முலைக்காம்பின் வழியோன்றி யதனைஅடைவது கூடாதிதுபோல, எங்கும் வியாபகசியவீசர் இவ் விலிங்கத்தின் வழியாய்நின்றே அனுக்கிரகிப்பரென்பது திண்ணம்

யாய்ச் செல்லுகையில், அங்குள்ள பாம்புகள், யானைகள், மான்கள் மயில்கள் பன்றிகள்முதலிய மிருகங்களும் அக்காட்டில்வாழும் குறவர்களும் தனக்குப சரிக்கக்கண்டு, முறையே இது முன்காளத்தியப்பரைப் பூசித்த பாம்பும் யானையும்போலும், இது அய்யன்கையில் விளங்கும் மானின் சந்ததிபோலும் இது முருகக்கடவுளது திருப்பாதந்தாங்கப் பெற்ற மயிலினம்போலும் இது முன்கண்ணப்ப நாயனுரெய்த பன்றியினிம்போலும் இவர் அந்நாயனாரது உரவினர்போலுமென்றெண்ணி அவைகளைப் பன்முறைபணிந்துநகருட்சென்றுதிருமலையைவலம்வந்து,

"வாளான்மகவரிந் தூட்டவல்லேனல்லன் மாதுசொன்ன
சூளாலிளமை துறக்கவல்லேனல்லன் றொண்டுசெய்து
நாளாறிற்கண்ணிடந்தப்பவல்லேனல்ல னினிச்சென்
றுளாவதெப்படியோ திருக்காளத்தியப்பருக்கே"

என்றது முதலிய பாடல்களால் அறுபான் மும்மை நாயன்மார்களின் றிருத்தொண்டின்றிறத்தினைப் புகழ்ந்து துதித்து சந்நிதியடைந்து பெருமானைப் பலவாறு தோத்தரித்து வெளியில்வந்து திருக்கைலாய தரிசனஞ் செய்யக்கருதி.

"மந்திக்குருளையொத் தேனில்லைநாயேன் வழக்கறிஞர்
சிந்திக்குஞ் சிந்தையை யானென்செய்வேனெனைத் தீதகற்றிப்
புந்திப்பரிவிற் குருளையையேந்திய பூசையைப்போ
லெந்தைக்குரிய வன்காணத்தனே கயிலாயத்தனே"

என்ற திருப்பாடலைப்பாடினர் உடனே சிவபெருமான் அங்கு திருக்கைலாய தரிசனந்தந்தருளப்பட்டினத்தடிகள் தரிசித்து,

"கான்சாயும்வெள்ளி மலைக்காசேநின் கழனம்பினை
னூஞ்சாயுஞ்சென்ம மொழித்திடுவாய்கர வூரனுக்காய்
மான்சாயச்செங்கை மழுவலஞ்சாய வனைந்தகொன்றைத்
தேன்சாயநல்ல திருமேனிசாய்த்த சிவக்கொழுந்தே"

என்பதுமுதலிய ஏழுதிருப்பாசுரங்களைப்பாடினர்.

## பட்டினத்தடிகள் திருவொற்றியூரடைந்தது

பின்பு பிள்ளையார் அங்கிருந்து புறப்பட்டுச் சென்று பிரமனும் விட்டுணுவும் வருந்தித்தேடியும் காணப்பெறுத திருத்தாள்கள்நோகச்சங்கிலியார் பாற்றூதுசென்ற பெருமானுரையும் ஒற்றியூரை யடைந்து திருக்கோயிலைப்பார்த்து,

"கண்டங்கரியதாங் கண்மூன்றுடையதா
மண்டத்தைப்போல வழகியதாந்-தொண்ட
ருடலுருகத்தித்திக்கு மோங்குபுகழொற்றிக்
கடலருகேநிற்குங் கரும்பு,,

என்ற திருவெண்பாவைப்பாடி யன்னகரி லுள்ள சராசரங்களெல்லாம் குருலிங்கஜங்கமங்க ளாகத்தோற்ற,

"வாவியெல்லாந்தீர்த்த மணலெல்லாம்வெண்ணீறு
காவணங்களெல்லாங்கணநாதர்-பூவுலகி
லீதுசிவலோக மென்றென்றேமெய்த்தவத்தோ
ரோதுந்திருவொற்றியூர்"

என்னுந் திருவெண்பாவைப் பாடியருளிதிரு வீதிவலம் வந்து,

"ஒடுவிழுந்துசீப்பாயு மொன்பதுவாய்ப்புண்ணுக்
கிடுமருந்தையானறிந்துகொண்டேன்-கடுவருந்துந்
தேவாதிதேவன் திருவொற்றியூர்த்தெருவிற்
போவாரடியிற்பொடி"

"சுடப்படுவாரறியார் புரமூன்றையுஞ்சுட்டபிரான்
றிடப்படுமாமதிற் றென்னொற்றியூரன் றெருப்பரப்பில்
நடப்பவர்பொற்பத நந்தலைமேற்படநன்குருண்டு
கிடப்பதுகாண்மனமேவிதியேட்டைக் கிழிப்பதுவே"

என்ற பாசுரங்களைப்பாடி அங்கப்பிரதட்சணஞ்செய்து சந்நிதியிற் பிறவேசித்து படம்பக்கநாதரைவணங்கி, உடல் குழைய என்பு நெக்குருக் கண்ணீருங் கம்பலையுமாய் நின்று.

"இருநிலமடக்கை யியல்பினுடுத்த
பெருகடன்மேகலை முகமெனப்பொலிந்த

என்னு முதலினையுடைய திருவொற்றியூர்த் தொகை பாடிப்புறம்போந்து,

"ஐயுந்தொடர்ந்துவிழியுஞ்செருகி யறிவழிந்து
மெய்யும்பொய்யாகிவிடுகின்றபோதொன்று வேண்டுவல்யான்
செய்யுந்திருவொற்றியூருடையீர்திரு நீறுமிட்டுக்
கையுந்தொழப்பண்ணி யைந்தெழுத்தோதவுங் கற்பியுமே,,

என்னுஞ்செய்யுட்களையும் முதல்வன்முறையீடு, அருட்புலம்பல், முதலியவைகளையுந்திருவாய் மலர்ந்தருளிமுன்திருவெண்காட்டினிற்பெற்ற சிவலிங்கப்பெருமானுக்குச் காலந் தவறுதுபூசனையியற்றி வந்தனர்.

## பட்டினத்தடிகள் இலிங்கவுருவானது

இங்ஙனமிருக்க ஒருநாள் பட்டினத்தடிகள் அவ்வூர்ப்புறத்திற்பசுமேய்க்குஞ்சிறுவரை நோக்கி நுங்கட்குச் சில வேடிக்கை காட்டுவேன் என்னை யொருகுழியிற் புதையுங்களென்றனர் அவர்களப்படியே செய்ய மற்றொரு மணற்குன்றிற்றோன்றினர் அச்சிறுவர் கண்டு அதிசயித்து அடிகளை மீட்டு மீட்டும் புதைக்க அங்ஙனமே வெளிவந்து கொண்டிருந்து கடைசியில்வெளிப்படாமற்சிவலிங்கருபமாகஞானசமாதிகொலுதந்துவீற்றருளினர். இ

றுவர்கள்கண்டுவியப்புற்றுஊரிலுள்ளவர்கட்கறிவி க்க ஊரானைவருந் திரண்டு வந்து கண் களிக்கத் தரிசித்துப் பணிந்து ஆனந்தங் கொண்டாடினர்,

உலகமெங்கும்புஷ்பமாரி பொழிந்தது அந்த ரந்துந்துபி முழங்கிற்று. இப்பூவுலகிலுள்ளாரும் தேவலோகத்துள்ளாரும்இதனையுணர்ந்துசிரமீதிரு கரங் கூப்பிப்பணிந்து இப்பெரும்பேரு நமக்குக் கிடைக்குமோவென்று கவலையுற்றனர் பூம்புகார்ப் பட்டினத்திலுள்ளா ரனைவரும் இச்செய்தி கேள்வி யுற்று அழுது தொழுது பூரணச்சந்திரனை யொத்த திருமுகத்தையுடைய நமது குலதெய்வம் வருமோ நாம் தரிசிக்கப் பெற்றுவோமோ என்று வருந்தி அங்கிருந்து புறப்பட்டு ஒற்றியூரடைந்து இப் பட்டினத்துக் கடவுளைப் பணிந்து பலதொண்டு கள் செய்து திருவட்பெருஞ் செல்வத்தினை கைக் கொண்டனர்.

முத்தி என்பது உருவமுத்தி அருவமுத்தி உருவாருவமுத்தி என மூவகைத்தென்றும். இம் மூவகையல்லாதுவேறுவிதங்களாய்க்கூறும்முத்திக ளெல்லாம் சொன்மாத்திரமேயன்றிப் பயனில தென்றும்வேதாகமங்கள் கூறுகின்றன வாதலின், நமது பட்டினத்தடிகள் அடைந்தது இவ்மூவகை யுள்உருவாருவமுத்தியேயாம்.

இதற்குமுன்னரே இவரது மனைவியராகிய சிவகலையம்மையார் இவரது திருவடியிணையே தியானித்துக் கொண்டிருந்து சிவபெருமான் திரு வடி நீழலடைந்தனர். என்று சூதபுராணிகர்சொல்ல நைமிசாரண்யவாசிகளாகிய முனிவர்கள் கேட்டு ஆனந்தக்கடலிலாழ்ந்தனர்.

முற்றுப்பெற்றது.